# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# Annual Performance Report **2025**

වෙළෙඳ, වාණිජ, ආහාර සුරක්ෂිතතා සහ සමුපකාර සංවර්ධන අමාත්‍යාංශය

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

**Ministry of Trade, Commerce, Food Security and Co-operative Development**

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை-2025

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு
அபிவிருத்தி அமைச்சு

**வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு**

**இல. 492, ஆர். ஏ. டி.மெல் மாவத்தை**

**கொழும்பு-03**

அத்தியாயம்


01 ஆம் அத்தியாயம் - நிறுவன விபரம்/ செயற்படுத்தல் சாராம்சம் ........ 1

1.1 அறிமுகம் ........ 1

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, செயற்பாடு மற்றும் நோக்கங்கள் ........ 1

1.3 செயற்பாடுகள் ........ 3

1.4 நிறுவகக் கட்டமைப்பு ........ 5

1.5 அமைச்சின் கீழ் செயற்படும் திணைக்களங்கள் ........ 6

1.6 அமைச்சின் கீழ் பேணப்படும் நிறுவனங்கள் மற்றும் நிதியங்கள் ........ 7

1.7 வெளிநாட்டு உதவி பெறும் வேலைத்திட்டங்கள் பற்றிய தகவல்கள் ........ 7

02. ஆம் அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் எதிர்கால இலக்குகள் ........ 8

2.1 2025.01.01 முதல் 2025.12.31 வரையான முன்னேற்றம் ........ 8

2.2 விசேட அடைவுச் சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள் ........ 21

03 ஆம் அத்தியாயம் - 2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகை ........ 25

3.1. நிதிச் செயலாற்றுகைக் கூற்று ........ 25

3.2. நிதி நிலைமை பற்றிய கூற்று ........ 27

3.3 நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று ........ 29

3.4 நிதிக் கூற்றுகளிற்கான குறிப்புகள் ........ 31

3.5. வருமான சேகரிப்புச் செயலாற்றுகை ........ 32

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை ........ 32

3.7 நி.பி. குறிப்பு 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இந்த அமைச்சின் செலவினத்திற்கான ஒதுக்கீடு ........ 32

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை ........ 32

3.9. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ........ 33

04. ஆம்அத்தியாயம்- செயலாற்றுகைக் குறிகாட்டிகள் ........ 45

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (செயற் திட்ட அடிப்படையில்) 45

05. ஆம் அத்தியாயம் - நிலைபேறான அபிவிருத்தி இலக்கை (SDG)அடைவதற்கான செயலாற்றுகை ........ 46

5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கை (SDG)அடைவதற்கான செயலாற்றுகை 46

5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைவதற்கான அடைவுகள் மற்றும் சவால்கள் ........ 48

06. ஆம் அத்தியாயம்; மனித வள விபரம் ........ 49

6.1பணியாளர் எண்ணிக்கை முகாமைத்துவம் ........ 49

6.2 நிறுவனத்தின் செயலாற்றுகையில் மனிதவள பற்றாகுறை அல்லது அதிகரிப்பு பாதித்த விதம் ........ 49

6.3 மனித வள அபிவிருத்தி ........ 50

07.ஆம் அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை ........ 51

# 01 ஆம் அத்தியாயம் - நிறுவன விபரம்/ செயற்படுத்தல் சாராம்சம்

## 1.1 அறிமுகம்

வர்த்தக வணிக, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சானது 2024.11.25 ஆம் திகதிய 2412/08 ஆம் இலக்க அதி விசேடவர்த்தமானி ஊடாகத் தாபிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோரின் உரிமையை பாதுகாத்து போட்டிமிக்க தேசிய சந்தை மூலம் மக்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல், வர்த்தகப் பிரிவிற்கு தலைமைத்துவம் அளித்து சேவைகள் மற்றும் ஒழுங்கமைப்புச் செயற்பாடுகளில் ஈடுபடுதல், தேசிய வர்த்தக கொள்கையொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், அவ்வர்த்தகக் கொள்கையை ஒழுங்கமைத்தல் மற்றும் செயற்படுத்தலின் ஊடாக இலங்கை மக்களின் நுகர்வோர் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தை உயர்த்துவதன் ஊடாக வாழ்க்கைத் தரத்தை உயர் மட்டத்தில் பேணுவதற்கு இவ்வமைச்சு பங்களிப்பை வழங்குகிறது. மேலும், உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு இவ் அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்களை ஒருங்கிணைப்பதுடன், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கு பங்களிப்பு வழங்குவதன் மூலம் சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கும், அந்நியச் செலாவணி வருமானத்தை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாத்தல், தேசிய புலமைச் சொத்துக்களைப் பாதுகாத்தல், உயர் கல்விக்காக குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு நிதி உதவி வழங்குதல், பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தைப் பாதுகாத்தல், துல்லியமான அளவீட்டு முறையை செயல்படுத்துதல், வணிகங்கள் மற்றும் பிற நிறுவனங்களைப் பதிவு செய்தல் போன்ற பணிகளும் இவ்வமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

## 1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, செயற்பாடு மற்றும் நோக்கங்கள்

### தொலைநோக்கு

“நிலைபேறான அபிவிருத்தியடைந்த இலங்கை”

### பணிக்கூற்று

வர்த்தகப் பிரிவின் தலைமையில் சேவை வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் மற்றும் ஏனைய சேவை வழங்குநர்களினதும் நுகர்வோரினதும் சமத்துவத்தையும் வர்த்தக உரிமைகளையும் உறுதிப்படுத்துகின்ற தேசிய மற்றும் சர்வதேச தரங்களுக்கு ஏற்றவாறான தேசிய வர்த்தக கொள்கையொன்றை உருவாக் குதல், அமுல்படுத்துதல் மற்றும் இலங்கையின் சர்வதேச வர்த்தகத்தொடர்பை அதிகரித்துக் கொள்வதற்கு இருதரப்பு, பல்தரப்பு மற்றும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் புதிய சந்தை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கும், இலங்கையரின் அன்றாட நுகர்வுப் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தை உயர்த்துவதன் மூலம் உயர் வாழ்க்கைத்தரத்தைப் பேணுவதற்கும் பங்களிப்பு வழங்குதல்.

**நோக்கங்கள்**

i. தேசிய வர்த்தகக் கொள்கை மூலம் தேசிய உற்பத்தியாளர்களதும் நுகர்வோரினதும் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் சந்தையைக் கையாளும் நிர்வாகத்திற்கான கருவியாக தீர்வை வரிக் கொள்கையை பயன்படுத்திக் கொள்ளல் மற்றும் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கான வரிச் சலுகைகளை வழங்குதல் மூலம் ஏற்றுமதியை ஊக்குவித்தல்.

ii. சந்தையில் பொருட்களின் விலை அசாதாரணமான முறையில் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகச் சங்கிலித்தொடரை அதிகரிப்பதன் மூலம் விலையைக் கட்டுப்படுத்தி வாழ்க்கைச் செலவைக் குறைந்த மட்டத்தில் பேணிச் செல்லுதல்.

iii. திறந்த போட்டித் தன்மையான சந்தைச் சூழலில் இலங்கை சதொச நிறுவனம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், தேசிய மட்டத்திலான கூட்டுறவுச் சங்கங்கள், ஒன்றியங்கள் போன்ற அரச நிறுவனங்கள் ஊடாக நுகர்வோருக்கு சலுகை ரீதியான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டலை வழங்கல்.

iv. வர்த்தக சமூகத்தைப் போன்றே நுகர்வோரினதும் நலனுக்காக அளவையியல் அலகுகள் தரங்களை உரியவாறு நடைமுறைப்படுத்துவதை சான்றுப்படுத்தல்.

v. உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் பாதுகாப்பு இருப்பை (Buffer Stock) பேணிச் செல்வதற்குத் தேவையான சட்டக் கட்டமைப்பைப் போன்றே உட்கட்டமைப்பு வசதிகளையும் அபிவிருத்தி செய்தல்.

vi. நுகர்வோர் பாதுகாப்பிற்குரிய சட்ட நடவடிக்கைகளின் பொருட்டு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்குத் தேவையான வழிகாட்டலை வழங்கல்.

vii. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கு ஏற்புடைய தரவுத் தொகுதியொன்றைப் பேணுதல், அத்தரவுத் தொகுதியை இற்றைப்படுத்தல், மற்றும் அத்தரவுகளை, வெளிவாரித் தகவல்களை வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்புபடுத்தும் பொறிமுறையொன்றைத் தயாரித்தல்.

viii. உள்ளூர் உற்பத்திகள் மற்றும் ஏற்றுமதிப் பொருட்களின் உரிய தரங்களைப் பாதுகாப்பதுடன் தொடர்புடைய ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்கு வழிகாட்டுதல்.

ix. உயர் கல்வியில் மாணவ மாணவிகளை ஊக்குவிப்பதற்கு ஏற்புடைய நலன்புரி செயற்பாடுகளை நடத்திச் செல்வதற்குப் பங்களிப்பு வழங்குதல்.

x. தேசிய புலமைச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்பு விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்.

xi. தேசிய மற்றும் சர்வதேச தரங்களுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தப்படும் இணக்க மதிப்பீட்டுக்கான அங்கீகாரச் சேவையைச் சான்றுப்படுத்துவதற்குரிய வழிகாட்டல்.

xii. இலங்கை பொருளாதாரம் மற்றும் வர்த்தக நலன்களைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு சர்வதேச சந்தை வாய்ப்பினை உருவாக்கும் பொருட்டு ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதற்குத் தேவையான நிறுவன பின்னணியை அமைத்து கொடுத்தல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களை ஊக்குவித்தல்.

xiii. இயைபுடைய இருதரப்பு, மற்றும் பலதரப்பு, பிராந்திய ரீதியாக நாடுகளுடன் உடன்படிக்கைகளைச் மேற்கொள்ளும்போது தேவையான வசதிகளைத் திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

xiv. இலங்கையில் ஏற்றுமதிக்காகத் தெரிவு செய்யப்பட்ட முன்னுரிமைகளுக்கான பொதுவான முறைமை (GSP), பரஸ்பரமற்ற வர்த்தக உடன்படிக்கை (NMTR), சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

(FTA) மற்றும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கை (RTA) போன்றவற்றின் சட்டரீதியான ஒருங்கிணைத்தலுக்கு தேவையான வழிக்காட்டல்கள்.

## 1.3 செயற்பாடுகள்

i. அமைச்சு, அரசினூடாக செயற்படுத்தப்படும் தேசிய கொள்கைகள் மீது அமைக்கப்பட்ட வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி விடயங்களுடன் தொடர்புடைய, மற்றும் அமைச்சுக்குரிய திணைக்களங்கள், நிலையியற் கட்டளை நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுக்கு ஏற்ப கொள்கைகள், உபாயத்திறன்கள், நிகழ்ச்சித் திட்டங்கள், வேலைத்திட்டங்கள், போன்றவற்றை உருவாக்குதல், செயற்படுத்துதல், பின்னூட்டம் பெறுதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

ii. அமைச்சின் விடயப் பரப்பிற்குரிய பொதுசன சேவைகளை வினைத்திறனுடனும், பொதுமக்களுக்கு உகந்த வகையிலும் வழங்கப்படுவதையும், அமைச்சின் பணிகள் விரயம் மற்றும் ஊழலைத் தவிர்த்துச் செம்மையாக நடைபெறுவதையும் உறுதிசெய்ய உதவும் வகையில், நவீன முகாமை முறைகளையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி அனைத்து முறைமைகளையும் விதிமுறைகளையும் செயற்படுத்துதல்.

iii. உள்நாட்டு விவசாய உற்பத்திகளுக்கான சந்தையை விரிவுபடுத்துதல் மற்றும் மாவட்ட மட்டத்தில் பிராந்திய பொருளாதார மத்திய நிலையங்களை நிறுவுதல்.

iv. சர்வதேச வர்த்தக உறவுகளைப் பேணுதல் மற்றும் தற்போதுள்ள வர்த்தக உடன்படிக்கைகளை மீளாய்வு செய்தல், மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் ஊடாக வெளிநாட்டு வர்த்தகப் பங்கினை அதிகரிக்க புதிய உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதல்.

v. குவிப்பு எதிர்ப்புச் சட்டங்களை வலுப்படுத்துதல், நியாயமான வர்த்தகச் சட்டங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் தற்போதுள்ள ஒழுங்குவிதிகளை இற்றைப்படுத்தல்.

vi. பெறுமதி சேர் உற்பத்திகளின் ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை ஊக்குவித்தல் மற்றும் வசதிப்படுத்துதல்.

vii. வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதை ஒழுங்கு செய்தல்.

viii. நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாக்கவும் உள்நாட்டு வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தவும் சந்தைப் போட்டியை உருவாக்குதல், சந்தையைக் கண்காணித்தல், திடீர் சோதனைகளை நடத்துதல் மற்றும் வர்த்தகர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் தெளிவுபடுத்துதல்.

ix. உள்நாட்டுச் சந்தையில் விலை ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்த ஒரு இடையீட்டாளராகச் செயல்படுதல்.

x. உலகச் சந்தையில் புதிய ஏற்றுமதி வாய்ப்புகளைக் கண்டறியவும், புதிய இருதரப்பு, பலதரப்பு மற்றும் பிராந்திய வர்த்தக ஒப்பந்தங்களுக்கான வாய்ப்புகளை ஆராயவும் நிறுவனங்களை ஊக்குவித்தல் மற்றும் தேவையான வசதியளித்தல்.


xi. இலங்கையில் புலமைச் சொத்துக்களைப் பாதுகாத்து, பொருளாதார நிலைத்தன்மையை ஊக்குவிக்கும் புலமைச் சொத்து முறைமை ஒன்றை நிறுவுதல்.

xii. கம்பனிகள், வணிகங்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு சட்டப்பூர்வ அந்தஸ்து வழங்கி, அவற்றின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல்.

xiii. உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் இறக்குமதியைக் கட்டுப்படுத்தவும், நுகர்வோருக்கு குறைந்த விலையில் பொருட்களை வழங்கவும், உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் வலையமைப்பை விரிவுபடுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

xiv. இலக்கிற்குரிய பயனாளிகளுக்கு (கர்ப்பிணி/ பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் போஷாக்குக் குறைபாடுள்ள குழந்தைகள்) திரிபோஷா உணவை வழங்குதல் மற்றும் போஷாக்கு நிறைந்த மேலதிக உணவு உற்பத்திகளை சந்தையில் அறிமுகப்படுத்துதல்.

## 1.4 நிறுவகக் கட்டமைப்பு



## 1.5 அமைச்சின் கீழ் செயற்படும் திணைக்களங்கள்

அமைச்சிற்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்காக அமைச்சின் கீழ் ஐந்து திணைக்களங்கள் செயற்படுகின்றன.

| தொடரிலக்கம் | அமைச்சின் கீழ் செயற்படும் திணைக்களங்கள் | செயற்படுத்தப்படவேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் |
|---|---|---|
| 1 | உணவு ஆணையாளர் திணைக்களம் | உணவு வழங்கல் சட்டம் (1942 இன் 42 ஆம் இலக்க) |
| **2** | அளவீட்டு அலகுகள், தரநிலைகள் மற்றும் சேவைகள் திணைக்களம் | அளவீட்டு அலகுகள், தரநிலைகள் மற்றும் சேவைகள் சட்டம் (1995 இன் 35 ஆம் இலக்க) |
| **3** | வர்த்தகத் திணைக்களம் | குவிப்பு எதிர்ப்பு மற்றும் எதிரீட்டு விளைவுகள் சட்டம் (2018 இன் 2 ஆம் இலக்க) |
| **4** | கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் (1972 இன் 5 ஆம் இலக்க) |
| **5** | கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் | கம்பனிச் சட்டம் (2007 இன் 7 ஆம் இலக்க)/ வியாபாரப் பெயர்கள் சட்டம் (1987 இன் 7 ஆம் இலக்க)/ சீட்டுகள் கட்டளைச் சட்டம்*(1935* இன் *3* ஆம் இலக்க*)/பொது ஒப்பந்தச் சட்டம் (1987* இன் *3* ஆம் இலக்க*)* |

## 1.6 அமைச்சின் கீழ் பேணப்படும் நிறுவனங்கள் மற்றும் நிதியங்கள்

அமைச்சிற்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்காக அமைச்சின் கீழ் இயங்குகின்ற சட்டபூர்வ நிறுவனங்கள் மற்றும் நிதியங்கள் பின்வருமாறு.

| தொடரிலக்கம் | அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்கள் | செயற்படுத்தப்படவேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் |
|---|---|---|
| 1 | வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம் | கம்பனிச் சட்டம் (2007 இன் 7 ஆம் இலக்க) |
| 2 | கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் | கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனச் சட்டம் (1949 இன் 44 ஆம் இலக்க) |
| 3 | இலங்கை ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை | இலங்கை ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபைச் சட்டம் (2005 இன் 32 ஆம் இலக்க)/ வர்த்தக நாமச் சட்டம் 1964 இன் 3 ஆம் இலக்க) |
| 4 | லலித் அதுலத்முதலி மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் | மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் சட்டம் (1981 இன் 66 ஆம் இலக்க) |
| 5 | பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபை | பானையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம் (2003 இன் 9 ஆம் இலக்க) |
| 6 | கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு | கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுச் சட்டம் (1972 இன் 12 ஆம் இலக்க) |
| 7 | தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம் | தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவன (கூட்டிணைப்பு) சட்டம் (2001 இன் 1 ஆம் இலக்க) |
| 8 | பிராந்திய பொருளாதார மத்திய நிலையங்கள் | கம்பனிச் சட்டம் (2007 இன் 7 ஆம் இலக்க) |
| 9 | இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம் | புலமைச் சொத்துக்கள் சட்டம் (2003 இன் 36 ஆம் இலக்க) |
| 10 | இலங்கை அரச வர்த்தக (நானாவித) கூட்டுத்தாபனம் | கம்பனிச் சட்டம் (2007 இன் 7 ஆம் இலக்க) |
| 11 | இலங்கை திரிபோஷா லிமிடெட் நிறுவனம் | கம்பனிச் சட்டம் (2007 இன் 7 ஆம் இலக்க) |

## 1.7 வெளிநாட்டு உதவி பெறும் வேலைத்திட்டங்கள் பற்றிய தகவல்கள்

**இல்லை**

# 02. ஆம் அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் எதிர்கால இலக்குகள்

## 2.1 2025.01.01 முதல் 2025.12.31 வரையான முன்னேற்றம்

**உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு**

- சகல பொருளாதார மத்திய நிலையங்களையும் ஒருங்கிணைத்து அந்த பொருளாதார மத்திய நிலையங்களை முகாமையிடல் மற்றும் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு "தேசிய விவசாய சந்தை சேவைகள்" ( National Agri Market Services Limited) என்ற பெயரில் திறைசேரிச் செயலாளரின் முழுப் பங்குரிமையுடன் ஒரு அரசுக்குச் சொந்தமான நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருட்களைச் சந்தையுடன் இணைக்க உதவும் ஒரு நிலையான சந்தை வலையமைப்பை உருவாக்குவதன் மூலம், விவசாயிகள் மற்றும் நுகர்வோ ர்களின் நலனை மேம்படுத்துவதே இந்த நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்.

- வவுனியா விசேட பொருளாதார மத்திய நிலையம் 2025.09.01 ஆம் திகதி திறந்துவைத்தல்




விவசாயிகளுக்கு வளமான விவசாய வாழ்க்கை, சந்தைக்கு மறுமலர்ச்சி' என்ற தலைப்பில் வவுனியா மதவுவைத்தகுளத்தில் வவுனியா விசேட பொருளாதார மத்திய நிலையம் திறந்து வைத்தல், வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க அவர்களின் தலைமையில் நடைபெற்றது

- யாழ்ப்பாணம் விசேட பொருளாதார மத்திய நிலையம் 2025.09.30 ஆம் திகதி திறக்கப்பட்டது.






- விவசாய உற்பத்திக் கூட்டுறவு சங்கங்களை வலுப்படுத்துதற்கான முதற்கட்டமாக, கூட்டுறவு இயக்கத்தில் முனைப்புடன் பங்காற்றிய 10 விவசாய உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் 7 உழவு இயந்திரங்களும் 3 தானிய உலர்த்திகளும் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி, 1000 உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவும் திட்டத்திற்காக

2025-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில், 2025.12.31 ஆம் திகதியளவில் 60% நிதி முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டுள்ளது.





● லங்கா சதொச தனது புதிய வலையமைப்பின் கீழ் மிகப்பெரிய சில்லறை விற்பனை நிலைய வளாகத்தை 2025 செப்டம்பர் 29 அன்று மலையக நகரமான பதுளையில் திறந்தது. "லங்கா சதொச எக்ஸ்க்ளுசிவ் - பதுளை" என்று பெயரிடப்பட்ட இந்த விற்பனை நிலையம், ஒரு பல்பொருள் அங்காடியை விட அதிகமானவற்றை வழங்குவதுடன், தைத்த ஆடைகள், உணவகங்கள், பேக்கரி பொருட்கள் மற்றும் மலிவு விலையில் கிடைக்கும் பல்வேறு பொருட்களுக்கான பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளது.






● உணவுப் பாதுகாப்பிற்கு தேவையான கொள்கை தீர்மானங்களை உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவிடம் சமர்ப்பித்து அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

லங்கா சதொச நிறுவனம் தனியார் துறையிடமிருந்து நியாயமான விலையில் உருளைக்கிழங்கு அறுவடைகளை கொள்வனவு செய்து, நுகர்வோருக்கு நியாயமான விலையில் விற்பனை செய்வதற்கான வழிகாட்டுதல்கள் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.

● அத்தியாவசிய உணவுப் பொருட்களை நுகர்வோருக்கு பற்றாக்குறையின்றி வழங்குவதை நோக்கமாகக் கொண்டு தொடர்புடைய நிறுவனங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் சந்தையில் பற்றாக்குறை உள்ள அத்தியாவசிய உணவுப் பொருட்களின் (அரிசி, உருளைக்கிழங்கு, வெங்காயம் போன்றவை) போதுமான விநியோகத்தை உறுதி செய்வதற்கு உணவுப் பாதுகாப்புக் குழுவிற்குத் தேவையான பரிந்துரைகளை சமர்ப்பித்தல்.

● அத்தியாவசிய நுகர்வோர் பொருட்கள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் நுகர்வோர் விவகார அதிகாரசபையுடன் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் நுகர்வோருக்கு தேவையான நிவாரணங்களை வழங்குதல்.

● உள்ளூர் வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை பண்ணும் விவசாயிகளைப் பாதுகாக்க வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு மீது இறக்குமதி வரிகளை விதிக்க வேண்டிய அவசியம் ஏற்படுமிடத்து, நேரடியாக ஈடுபடுதல்.

• 30 ஆண்டுகளுக்குப் பின் நாட்டில் ஏற்பட்ட காலநிலை மாற்றம் காரணமாக உப்புக் கைத்தொழிலில் ஏற்பட்ட உற்பத்திப் பற்றாக்குறையைத் தடுக்கும் நோக்கில் சந்தையை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

## வர்த்தக மற்றும் வாணிபம்

• 2025 ஒக்டோபரில் ஜெனீவாவில் நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பு (WTO) வர்த்தகக் கொள்கை மீளாய்வில் பங்கேற்ற அமைச்சர் வசந்த சமரசிங்க, அமைச்சின் செயலாளர் மற்றும் உரிய அலுவலர்கள், சீர்திருத்த உறுதிமொழிகள் மற்றும் உலகளாவிய ஆதரவுடன் இலங்கையின் உலக வர்த்தக அமைப்பு (WTO) வர்த்தகக் கொள்கை மீளாய்வைப் பூர்த்தி செய்தனர்.






• குவிப்பு எதிர்ப்பு மற்றும் எதிரீட்டு விளைவிகள் வரிச் சட்டம் தொடர்பான ஒழுங்குவிதிகளை 2025 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்த தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

• உணவு பதப்படுத்துதல், விவசாயம் மற்றும் அது தொடர்பான துறைகளில் கூட்டாண்மைகள், முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றத்தை ஆராய்வதற்கான ஒரு தளத்தை வழங்கிய உலக உணவு விழா 2025, செப்டம்பர் மாதம் இந்தியாவில் நடைபெற்றது. இந்த அமைச்சின் மாண்புமிகு அமைச்சரும், செயலாளரும் இதில் பங்கேற்று விவசாய வணிக மற்றும் உணவு நிறுவனங்களின் தலைவர்களைச் சந்தித்ததுடன், தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. "உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, திறன் விருத்தி மற்றும் பரஸ்பர ஆர்வமுள்ள பிற துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துதல்" ஆகிய விடயப்பரப்புகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்ததுவதில் கவனம் செலுத்தப்பட்டது.





• பிராந்திய விரிவான பொருளாதார கூட்டாண்மை (Regional Comprehensive Economic Partnership (RCEP) தொடர்பாக ஆரம்ப கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு, ஆரம்ப வினாக்கொத்து

மற்றும் இடைவெளி பகுப்பாய்வு GAP Analysis RCEP என்பன பணியகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

• தேசிய தீர்வைவரிக் கொள்கை (National Tariff Policy) செயற்படுத்தல் தொடர்பாக உப குழுக்களைக் ஒன்றிணைத்து ஒவ்வொரு துறைக்கும் வரி திருத்தங்கள் குறித்து கலந்துரையாடுதல்.

இலங்கையின் தேசிய தீர்வைவரிக் கொள்கையின் ஏற்பாடுகளின்படி தீர்வை வரிகளில் மாற்றங்கள் அல்லது புதுப்பித்தல்களை பரிந்துரைத்தல் உட்பட, தேசிய தீர்வை வரிக் கொள்கையை அமுல்ப்படுத்துவதை எளிதாக்குவதற்காக, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் தலைமையில் ஒரு உப குழுவை நிறுவி கலந்துரையாடுதல், பருவகால ரீதியாக உற்பத்தி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதி மீது வரி விதிப்பது தொடர்பான பரிந்துரைகளை வழங்குதல் உட்பட, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மீது விதிக்கப்படும் இறக்குமதி வரிகள் தொடர்பான பரிந்துரைகளை வழங்குதல்.

• முன்மொழியப்பட்ட இலங்கை - நியூசிலாந்து இடையேயான வர்த்தக மற்றும் முதலீட்டு கட்டமைப்பு உடன்படிக்கைகள் (Trade and Investment Framework Agreements) குறித்த கலந்துரையாடல்கள் மற்றும் மேலதிக செயற்பாடுகள் என்பன நடைபெற்று வருகின்றன.

• உலக வங்கி மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு என்பவற்றால் முன்வைக்கப்பட்ட புதிய தீர்வை வரித் திருத்தங்கள் குறித்து கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

• தற்போது நடைமுறையில் உள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை மீளாய்வு செய்வதற்கும், எதிர்காலத்தில் உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கும் அமைச்சரவையினால் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை மீளாய்வு செய்வதற்கும், எதிர்காலத்தில் ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கும் இந்தக் குழுவினால் தற்போது அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

• 2025 டிசம்பர் 09 ஆம் திகதி இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான வர்த்தகம்



தொடர்பான 3 ஆவது உப குழுக் கூட்டம் (Sub-Committee Meeting on Trade) கொழும்பில் நடைபெற்றது. இதில் இருதரப்பு வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடுவதற்காக இரு நாடுகளின் உயர் மட்ட பிரதிநிதிகள் ஒன்றுகூடினர்.

• தெற்காசியப் பெண் தொழில்முனைவோர்கள் தங்களது இலத்திரனியல் (டிஜிட்டல்), மற்றும் நிகழ்நிலை வணிகத் திறன்களை வலுப்படுத்த உதவும் நோக்கில், மூன்று நாள் பயிற்சிப்பட்டறை ஒன்று 2025 நவம்பர் 18 முதல் 20 வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்றது.





• 2025.10.15 ஆம் திகதி இலங்கையின் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் (FTAகள்) மற்றும் முன்னுரிமை மற்றும் முன்னுரிமையற்ற வர்த்தக ஏற்பாடுகள் மூலம் கிடைக்கப்பெறும் சந்தை அணுகல் வாய்ப்புகள் குறித்த சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோரின் அறிவை மேம்படுத்தும் நோக்கத்தில், வர்த்தகத் திணைக்களம், காலி மாவட்ட செயலகம் மற்றும் சிறுதொழில் அபிவிருத்திப் பிரிவு (SED) ஆகியவற்றுடன் இணைந்து, காலி மாவட்டத்தில் உள்ள சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்காக (SMEs) ஒரு விழிப்புணர்வு கருத்தரங்கை வெற்றிகரமாக நடத்தியது.



• 2025.06.19 ஆம் திகதி குன்மிங் தியன்சி சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சி நிலையத்தில் நடைபெற்ற எக்ஸ்போவில் உள்ள இலங்கை அரங்கம் கௌரவ வசந்த சமரசிங்க மற்றும் அருண் ஹேமச்சந்திர ஆகிய அமைச்சர்களால் அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்த கண்காட்சிக்கு 54 நாடுகள் மற்றும் பிராந்தியங்களிலிருந்து 1,400 இற்கும் மேற்பட்டோர் பங்குபற்றினர். இந்த அரங்கம், தேயிலை, மசாலாப் பொருட்கள், இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள், கைவினைப்பொருட்கள், ஆடைகள், தேங்காய் சார்ந்த பொருட்கள், மற்றும் சுற்றுலா போன்ற இலங்கையின் முக்கியத் துறைகளைக் காட்சிப்படுத்தியதுடன், சர்வதேச கொள்வனவாளர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் இலங்கையின் தனித்துவமான பொருளாதார மற்றும் கலாச்சார விழுமியங்கள் குறித்த பெறுமதிமிக்க அறிவுகளை வழங்கியது.

• சீனா-இலங்கை கூட்டு வர்த்தக மற்றும் பொருளாதார ஆணைக்குழுவின் 8 ஆவது கூட்டம் 2025 மே 29 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது. சீன வர்த்தக அமைச்சர் வாங் வென்டாவோ மற்றும் இலங்கை வர்த்தக அமைச்சர் கௌரவ வசந்த சமரசிங்க ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், 'பட்டுப் பாதை' ஒத்துழைப்பை மேம்படுத்துதல், வர்த்தகம் மற்றும் முதலீட்டை விரிவுபடுத்துதல், மற்றும் பலதரப்பு வர்த்தக முறைமையைப் பாதுகாத்தல் ஆகியவை

குறித்து இரு தரப்பினரும் ஆழமான கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர். பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

• ஒன்று, வர்த்தக வசதிக்கான தொழில்நுட்பக் குழுவை (Working Group) நிறுவுதல் தொடர்பானது; மற்றையது, கைத்தொழில் மற்றும் விநியோகச் சங்கிலி ஒத்துழைப்பு (industrial and supply chain cooperation) தொடர்பானது.



பிரதான கூட்டு ஆணைக்குழுவுடன் இணைந்து இலங்கை – சீனா வர்த்தக மற்றும் முதலீட்டு மன்றம் (Sri Lanka - China Trade and Investment Forum), 2025 மே 30 ஆம் திகதி நடைபெற்றது. இது, 77 முன்னணி சீன நிறுவனங்களைச் சேர்ந்த 115 இற்கும் மேற்பட்ட சிரேஸ்ட பிரதிநிதிகளையும், இலங்கையின் பொது மற்றும் தனியார் துறைகளின் முக்கிய உறுப்பினர்களையும் ஒன்றிணைத்தது. இந்த உயர்மட்ட நிகழ்வானது, இலங்கை வர்த்தக சபை, இலங்கை வர்த்தகத் திணைக்களம், இலங்கை வர்த்தக சபையின் இலங்கை – சீனா வர்த்தக கவுன்சில் மற்றும் இயந்திரங்கள் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கான சீன வர்த்தக சபை (CCME) ஆகியவற்றால் இணைந்து நடத்தப்பட்டது.



• சமீபத்திய ஆண்டுகளில் இலங்கையின் பிரதான ஏற்றுமதி இலக்காக அமெரிக்கா இருந்து வருகிறது. 2025 ஆம் ஆண்டில், அமெரிக்காவிற்கான ஏற்றுமதி முந்தைய ஆண்டை விட 3% அதிகரித்து, 2.9 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. இந்தச் சூழலில், ஒவ்வொரு நாட்டுடனும் தமது வர்த்தகப் பற்றாக்குறைகள்/ இருப்புகளுக்கு இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்காக, அமெரிக்கா 2025-ஆம் ஆண்டில் ஒரு பரஸ்பரத் தீர்வை முறையை அறிமுகப்படுத்தியது. அதன்படி, பல்வேறு நாடுகளின் வர்த்தகப் பற்றாக்குறைகளின் அளவைப் பொறுத்து பரஸ்பரத் தீர்வை வரிகள் விதிக்கப்பட்டன. அதே திட்டத்தின் கீழ், இலங்கை மீதும் 44% பரஸ்பரத் தீர்வைவரி விதிக்கப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற பல கலந்துரையாடல்களின் விளைவாக, 2025 ஆகஸ்ட் இல் 44% பரஸ்பரத் தீர்வையானது மேலும் 20% ஆகக் குறைக்கப்பட்டது. இலங்கை மீது விதிக்கப்பட்டுள்ள தீர்வையை மேலும் குறைப்பதற்காக ஒரு விசேட குழு தற்போது அமெரிக்காவுடன் கலந்துரையாடி வருகிறது. இதன் விளைவாக, இந்தக் கலந்துரையாடலின் முடிவில், இலங்கைக்குப் பயனளிக்கும் பொருத்தமான ஒரு வர்த்தக உடன்படிக்கையை எட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

• இலங்கை-துருக்கி பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான கூட்டுக் குழுவின் (JCETC) 3 ஆவது அமர்வு 2025 ஜூலை 24 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது. இந்த உயர்மட்டக் கூட்டம், பல முக்கியத் துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்தி, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதில் ஒரு முக்கிய மைல்கல்லைக் குறித்தது.

வர்த்தகம் மற்றும் முதலீடு முதல் விவசாயம், கல்வி, கடல்சார் விவகாரங்கள், போக்குவரத்து, சுகாதாரம், சுற்றுலா மற்றும் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் வரை பரந்த அளவிலான துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான இரு நாடுகளின் புதுப்பிக்கப்பட்ட உறுதிப்பாட்டை இக்கூட்டம் எடுத்துக்காட்டியது.

இலங்கைத் தூதுக்குழுவிற்கு வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ வசந்த சமரசிங்க தலைமை தாங்கினார், அதேசமயம் துருக்கியத் தூதுக்குழுவிற்கு அதன் தேசிய கல்வி அமைச்சர் திரு. யூசுப் டெக்கின் தலைமை தாங்கினார். வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சுச் செயலாளர் மற்றும் சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய விவகாரங்களுக்கான துருக்கியின் பணிப்பாளர் நாயகம் ஆகியோரால் தொழில்நுட்ப மட்டத்திலான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

## நிறுவன ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்

அமைச்சின் சகல நிறுவனச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன், ஏனைய நிறுவனங்களுடனும் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டு, அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்கள் தொடர்பான அமைச்சரவைப் பத்திரங்கள் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

| தொடரிலக்கம் | அமைச்சரவைத் தீர்மானத் திகதி | அமைச்சரவை விஞ்ஞாபனத் தலைப்புகள் |
|---|---|---|
| 1 | 2025/01/06 | சிவப்பு பச்சை அரிசி இறக்குமதிக்கான அங்கீகாரம் |
| 2 | 2025/01/20 | இலங்கை அரச (நானாவித) கூட்டுத்தாபனத்தால் வீடு மற்றும் கைத்தொழில் தேவைகளுக்காக 30,000 மெட்ரிக் தொன் பதப்படுத்தப்பட்ட மற்றும் அயோடின் கலக்கப்படாத உப்பு இறக்குமதி செய்தல். |
| 3 | 2025/01/20 | அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுவின் (SCAPC) கீழ், இலங்கை அரச வர்த்தக (நானாவித) கூட்டுத்தாபனத்தால் நாட்டு அரிசியை ஒத்த 20,800 மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்தல். |
| 4 | 2025/01/20 | இலங்கை கணக்காளர் சேவையின் விசேட தர அலுவலரான திருமதி கே. ஏ .பி. டி சில்வாவை, கம்பனிப் பதிவாளர் பதவிக்கு பதிற் கடமையின் பொருட்டு நியமித்தல். |
| 5 | 2025/01/20 | மன்னார் மாவட்டத்தில் உள்ள தாராபுரம் கூட்டுறவு கிராமத் திட்டத்தின் எதிர்கால நடவடிக்கை குறித்து தீர்மானமெடுப்பதற்காக குழுவொன்றை நியமித்தல். |
| 6 | 2025/02/03 | மட்ரிட் நெறிமுறையின் கீழ் வர்த்தக மற்றும் சேவை முத்திரைகளின் சர்வதேசப் பதிவை அனுமதிக்கும் வகையில், 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துகள் சட்டத்தில் திருத்தஞ் செய்தல். |

| தொடரிலக்கம் | அமைச்சரவைத் தீர்மானத் திகதி | அமைச்சரவை விஞ்ஞாபனத் தலைப்புகள் |
|---|---|---|
| 7 | 2025/02/03 | தேசிய கூட்டுறவு இயக்கம் தொடர்பான நிரல் நிறுவனங்களை மறுசீரமைத்தல். |
| 8 | 2025/02/09 | இலங்கைத் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தில் ஆவணங்களை இலத் திரனியல் ( டிஜிட்டல் ) மயப்படுத்துதல். |
| 9 | 2025/02/09 | இலங்கை-தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை செயற்படுத்துதல். |
| 10 | 2025/02/19 | வர்த்தகத் திணைக்களத்தின் வர்த்தகப் பணிப்பாளர் நாயகத்தை நியமித்தல். |
| 11 | 2025/03/10 | SC/FR/288/2023 ஆம் இலக்க அடிப்படை உரிமைகள் மனு தொடர்பான அமைச்சரவைத் தீர்மான விடய இல. (32) 25/ විවිධ(007). |
| 12 | 2025/03/03 | வர்த்தக தீர்வு ஒழுங்குவிதிகளைச் செயல்படுத்துதல் மற்றும் வர்த்தகத் திணைக்களத்தின் வர்த்தகத் தீர்வுப் பிரிவை வலுப்படுத்துதல். |
| 13 | 2025/05/15 | வீடு மற்றும் கைத்தொழில் தேவைகளுக்காக இலங்கை அரச வர்த்தக (நானாவித) கூட்டுத்தாபனத்தால் 8,400 மெட்ரிக் தொன் பதப்படுத்தப்பட்ட மற்றும் அயோடின் கலக்கப்படாத உப்பை இறக்குமதி செய்தல். |
| 14 | 2025/03/10 | SC/FR/99/2024 ஆம் இலக்க அடிப்படை உரிமை மனு. |
| 15 | 2025/03/24 | “காலத்தோடொத்த உணவுப் பொதி” வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதற்குப் பொருத்தமான முறை. |
| 16 | 2025/03/24 | 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம் திருத்தம் செய்தல். |
| 17 | 2025/03/24 | கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்தை மீள செயற்படுத்துதல். |
| 18 | 2025/03/24 | 2019 ஆம் ஆண்டின் தெற்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் வீதி அபிவிருத்திப் பணிகளைப் பொருத்தமான அமைச்சிற்கு மாற்றுதல். |
| 19 | 2025/03/24 | இலங்கை நிர்வாக சேவையின் மூன்றாம் தர அலுவலரான திரு. லால் ஹேவபத்திரணவை, கடமை நிறைவேற்றுகை அடிப்படையில் உணவு ஆணையாளர் பதவிக்கு நியமித்தல். |
| 20 | 2025/04/01 | தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை - 2023. |
| 21 | 2025/04/07 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு - கூட்ட இல. 05 |
| 22 | 2025/04/21 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு - கூட்ட இல 06 |
| 23 | 2025/05/07 | கம்பனிகள் பதிவாளர் நாயகம் பதவியில் பதிற் கடமை பொருட்டு நியமிக்கப்பட்ட திருமதி கே.ஏ.பி.டி சில்வா, ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக வெளிநாட்டிற்குச் சென்றமை காரணமாக அப்பதவியின் கடமை மேவுகை பொருட்டு கம்பனிப் பதிவாளர் திருமதி. பி.பி.எஸ். ஹர்ஷனி அவர்களை நியமித்தல் |

| தொடரிலக்கம் | அமைச்சரவைத் தீர்மானத் திகதி | அமைச்சரவை விஞ்ஞாபனத் தலைப்புகள் |
|---|---|---|
| 24 | 2025/05/07 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு - கூட்ட இல 07 |
| 25 | 2025/05/19 | வர்த்தகப் பணிப்பாளர் நாயகத்தை நியமித்தல் - வர்த்தகத் திணைக்களம் |
| 26 | 2025/05/15 | வீடு மற்றும் கைத்தொழில் நோக்கங்களுக்காக அயடீன் சேர்க்கப்படாத மற்றும் உண்ணத்தக்க அயடீன் சேர்க்கப்பட்ட உப்பினை (தூளாக்கப்பட்ட மற்றும் சிறுகல் உப்பு) இறக்குமதி செய்தல். |
| 27 | 2025/05/19 | விசேட பொருளாதார மத்திய நிலையங்களை முகாமையிடும் பொருட்டு பொறுப்பு வாய்ந்த நிறுவனம் ஒன்றைக் கூட்டிணைப்பதற்கான அங்கீகாரம் |
| 28 | 2025/05/26 | பாராளுமன்ற அங்கீகாரம் பொருட்டு ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்தலுக்கான அங்கீகாரம்<br>(2018 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குவிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டம்) |
| 29 | 2025/05/26 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு - கூட்ட இல 08 |
| 30 | 2025/05/26 | இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் சுமூகமான இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக பணிக்குழுவை தாபிப்பதன் பொருட்டு புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுவதற்கான அங்கீகாரம். |
| 31 | 2025/05/26 | விசேட பொருளாதார மத்திய நிலையங்களை முகாமையிடும் பொருட்டு பொறுப்பு வாய்ந்த நிறுவனம் ஒன்றைக் கூட்டிணைப்பதற்கான அங்கீகாரம் |
| 32 | 2025/06/02 | இலங்கைத் தேசிய புலமைச் சொத்துகள் அலுவலகத்தின் I ஆம் தர அலுவலர் திருமதி. ஹிமாலி ஹெட்டிஹேலகேயினை புலமைச் சொத்துகள் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு பதில் கடமை அடிப்படையில் நியமித்தல் |
| 33 | 2025/06/09 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>உலக வர்த்தக ஸ்தாபனத்தின் கடற்றொழில் உதவுதொகைகள் தொடர்பான உடன்படிக்கையின் முதல் கட்டத்தை செயற்படுத்துவதற்கான அங்கீகாரம் |
| 34 | 2025/06/02 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு - கூட்ட இல 09 |
| 35 | 2025/06/02 | இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான<br>தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை **2022** |
| 36 | 2025/06/02 | வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை **2022** |
| 37 | 2025/06/09 | அரச துறை நிறுவனங்களால் ஒற்றை விலைமனுகோரல் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்திலிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுகை |
| 38 | 2025/06/16 | அரச துறை நிறுவனங்களால் ஒற்றை விலைமனுகோரல் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்திலிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுகை |
| 39 | 2025/06/23 | இலங்கை அரச வர்த்தக (நானாவித) கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை 2023/2024 |
| 40 | 2025/07/01 | தேசிய தராதர சபையைத் தாபிக்கும் (NQC) பொருட்டு பங்குதாரர்களின் வழிநடத்தற் குழு மற்றும் தொழில்நுட்ப பணிக் குழு என்பவற்றை நியமித்தல் |

| தொடரிலக்கம் | அமைச்சரவைத் தீர்மானத் திகதி | அமைச்சரவை விஞ்ஞாபனத் தலைப்புகள் |
|---|---|---|
| 41 | 2025/07/01 | வர்த்தகப் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு பதில் அடிப்படையில் நியமிக்கப்பட்ட திருமதி அமினா ஷாஃபி மொஹின் அவர்கள், நமீபியாவில் நடைபெறும் பொதுநலவாய வர்த்தக அமைச்சர்கள் மற்றும் சிரேஸ்ட வர்த்தக அலுவலர்களின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வெளிநாடு சென்றுள்ளதால், அந்தப் பதவியின் கடமை மேவுகை பொருட்டு பதில் வர்த்தகப் பணிப்பாளர் திரு. பி. ஜெயக்கொடியை நியமனம் செய்தல் |
| 42 | 2025/07/07 | உணவு ஆணையாளர் திணைக்களத்தில் கடமைகளை நிறைவேற்றும் அடிப்படையில் உணவு ஆணையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் தரம் III அலுவலர் திரு. லால் ஹேவாபத்திரன அவர்களின் பதவிக்காலத்தை நீடித்தல் |
| 43 | 2025/07/07 | வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி ஜி.எல்.டி. தஹநாயக்க அவர்களை புலமைச் சொத்துகள் பணிப்பாளர் நாயகம் பதவிக்கான கடமைகளின் மேவுகை பொருட்டு நியமித்தல் |
| 44 | 2025/07/21 | 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம் திருத்தம் செய்தல் |
| 45 | 2025/07/21 | இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் முன்னாள் புலமைச் சொத்துக்கள் பணிப்பாளர் நாயகம் திருமதி. கீதாஞ்சலி ஆர். ரணவக்க சேவையிலிருந்து ஓய்வுபெறுதல் |
| 46 | 2025/06/23 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு - கூட்ட இல 10 |
| 47 | 2025/07/24 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு - கூட்ட இல 11 |
| 48 | 2025/08/04 | கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்/ கூட்டுறவு சங்கப் பதிவாளர் பதவியின் கடமை மேவுகை பொருட்டு வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்று கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் சிரேஸ்ட உதவிச் செயலாளர் திருமதி. தரணி குமாரதாஸ அவர்களை நியமித்தல் |
| 49 | 2025/07/21 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு - கூட்ட இல 12 |
| 50 | 2025/07/21 | கைத்தொழில் தேவைகளுக்காக அரிசி அல்லது உடைத்த அரிசி மற்றும் பிற மாற்று மூலப்பொருட்களை இறக்குமதி செய்வது குறித்த பரிந்துரைகளை வழங்குவதற்காக, தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துதல். |
| 51 | 2025/08/04 | கைத்தொழில் தேவைகளுக்காக அரிசி அல்லது உடைத்த அரிசி மற்றும் பிற மாற்று மூலப்பொருட்களை இறக்குமதி செய்வது குறித்த பரிந்துரைகளை வழங்குவதற்காக, தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துதல். |
| 52 | 2025/08/11 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு - கூட்ட இல 13 |
| 53 | 2025/08/25 | கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் கம்பனிகள் பதிவாளர் நாயகம் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அங்கீகாரமளித்தல் |
| 54 | 2025/08/25 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு - கூட்ட இல 14 |

| தொடரிலக்கம் | அமைச்சரவைத் தீர்மானத் திகதி | அமைச்சரவை விஞ்ஞாபனத் தலைப்புகள் |
|---|---|---|
| 55 | 2025/09/03 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம் கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்தினூடாக 1,000 மெட்ரிக் தொன் உலர்ந்த மஞ்சளை இறக்குமதி செய்தல் |
| 56 | 2025/09/03 | கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்திற்கு (சதொச) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பணியாளர்களின் சேவையை நீடித்தல் மற்றும் பணியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் |
| 57 | 2025/09/08 | கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்திற்கு (சதொச) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பணியாளர்களின் சேவையை நீடித்தல் மற்றும் பணியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் |
| 58 | 2025/09/08 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம் உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு - கூட்ட இல 15 |
| 59 | 2025/09/03 | கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் கம்பனிகள் பதிவாளர் நாயகம் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அங்கீகாரமளித்தல் |
| 60 | 2025/09/22 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம் உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு - கூட்ட இல 16 |
| 61 | 2025/09/22 | கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்திற்கு (CWE) நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் |
| 62 | 2025/10/07 | இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை - 2023 |
| 63 | 2025/10/07 | அரிசி இறக்குமதி/ கொள்வனவிற்கான தழுவு அங்கீகாரம் |
| 64 | 2025/10/07 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம் உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு - கூட்ட இல 17 |
| 65 | 2025/10/07 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம் 2025/26 பெரும் போகத்திற்கு நெல் வயல்களில் பயிரிடும் விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்குதல் |
| 66 | 2025/10/13 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம் சந்தையில் பற்றாக்குறை நிலவும் அரிசி வகைகள் போதுமான அளவில் கிடைப்பதை உறுதி செய்தல் |
| 67 | 2025/10/13 | வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்ட விவசாயப் பொருட்களை நேரடியாக கொள்வனவு செய்தல். |
| 68 | 2025/10/13 | வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தின் ஊடாக கால்நடைத் தீவன உற்பத்திக்காக 50,000 மெட்ரிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்து விநியோகித்தல் |
| 69 | 2025/10/13 | கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் (CWE) விரிவான வணிகத் திட்டத்தை செயற்படுத்துதல் |
| 70 | 2025/10/21 | புலமைச் சொத்துக்கள் பணிப்பாளர் நாயகம் பதவியின் கடமை மேவுகை பொருட்டு வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளரும், இலங்கை நிர்வாக சேவையின் தரம் I அலுவலருமான திரு. குமுது மீகஹகே அவர்களை நியமித்தல் |
| 71 | 2025/10/21 | அளவீட்டு அலகுகள், தரநிலைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திரு. ஆர்.ஜி.எஸ்.ஏ. பெரேரா அவர்களை, அத்திணைக்களத்தின் பணிப்பாளர் பதவியில் கடமை மேவுகை பொருட்டு நியமித்தல். |

| தொடரிலக்கம் | அமைச்சரவைத் தீர்மானத் திகதி | அமைச்சரவை விஞ்ஞாபனத் தலைப்புகள் |
|---|---|---|
| 72 | 2025/10/21 | அரச துறை நிறுவனங்களால் ஒற்றை விலைமனுகோரல் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்திலிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுகை |
| 73 | 2025/10/27 | கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் (CWE) விரிவான வணிகத் திட்டத்தை செயற்படுத்துதல். |
| 74 | 2025/1/03 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு - கூட்ட இல 18. |
| 75 | 2025/11/10 | கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்/ கூட்டுறவு சங்கப் பதிவாளர் பதவி பொருட்டு வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்று கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் சிரேஸ்ட உதவிச் செயலாளர் திருமதி. தரணி குமாரதாஸ அவர்களை நியமித்தல். |
| 76 | 2025/11/17 | கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் கம்பனிகள் பதிவாளர் நாயகம் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அங்கீகாரமளித்தல். |
| 77 | 2025/11/24 | பிராந்திய விரிவான பொருளாதார பங்காண்மை உடன்படிக்கையில் (RCEP) இலங்கை இணைவதற்கான அங்கீகாரம். |
| 78 | 2025/12/01 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு - கூட்ட இல 19. |
| 79 | 2025/12/01 | விசேட பொருளாதார மத்திய நிலையங்களை சந்தைப்படுத்தல் நிலையங்களாக அபிவிருத்தி செய்து முகாமையிடுதற்காக புதிதாக கூட்டிணைக்கப்பட்ட " தேசிய விவசாயச் சந்தை சேவை லிமிடெட் " நிறுவனத்திற்கு ஆரம்ப மூலதனத்தை ஒதுக்கீடு செய்தல். |
| 80 | 2025/12/10 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு - கூட்ட இல 20. |
| 81 | 2025/12/10 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு - கூட்ட இல 21. |
| 82 | 2025/12/10 | விசேட பொருளாதார மத்திய நிலையங்களை சந்தைப்படுத்தல் நிலையங்களாக அபிவிருத்தி செய்து முகாமையிடுதற்காக புதிதாக கூட்டிணைக்கப்பட்ட<br>தேசிய விவசாயச் சந்தை சேவைகள் லிமிடெட் " நிறுவனத்திற்கு ஆரம்ப மூலதனத்தை ஒதுக்கீடு செய்தல். |
| 83 | 2025/12/10 | வழங்கலை இரத்துச்செய்தல்: வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தின் ஊடாக கால்நடைத் தீவன உற்பத்தி பொருட்டு 50,000 மெட்ரிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்து விநியோகித்தல். |
| 84 | 2025/12/15 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு - கூட்ட இல 21 |
| 85 | 2025/12/15 | கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்/ கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் பதவியின் கடமை மேவுகை பொருட்டு வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்று கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் சிரேஸ்ட உதவிச் செயலாளர் திருமதி. இனோஷா அசந்தி பெரேரா அவர்களை நியமித்தல் |

| தொடரிலக்கம் | அமைச்சரவைத் தீர்மானத் திகதி | அமைச்சரவை விஞ்ஞாபனத் தலைப்புகள் |
|---|---|---|
| 86 | 2025/12/15 | மன்னார் மாவட்டத்தில் தாராபுரம் கூட்டுறவுக் கிராம வேலைத்திட்டத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து தீர்மானம் எடுப்பதற்காக குழு ஒன்றை நியமித்தல் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்தல் |
| 87 | 2025/12/15 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>மருத்துவ வழங்கல் பிரிவுக்கு களஞ்சிய வசதி வழங்குதல் - வெயாங்கொடை உப களஞ்சியம். |
| 88 | 2025/12/15 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>நெல் சந்தைப்படுத்தல் சபையில் பதிவுசெய்யப்பட்ட நெல் ஆலை உரிமையாளர்களுக்கு, அந்த சபையால் தற்போது கொள்வனவு செய்யப்பட்ட நெல் இருப்புகளை சதொச மூலம் பதப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குதல். |
| 89 | 2025/12/15 | வழங்கலை இரத்துச்செய்தல்: வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தின் ஊடாக கால்நடைத் தீவன உற்பத்தி பொருட்டு 50,000 மெட்ரிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்து விநியோகித்தல். |
| 90 | 2025/12/22 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு - கூட்ட இல 20 |
| 91 | 2025/12/22 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு - கூட்ட இல 22 |
| 92 | 2025/12/22 | வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தின் செற்பாட்டு மூலதனத் தேவைகளுக்கான நிதி வசதிகளைப் பெறுதல். |
| 93 | 2025/12/22 | லலித் அத்துலத் முதலி மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த அறிக்கை -2023 |
| 94 | 2025/12/22 | இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை - 2024 |
| 95 | 2025/12/29 | மன்னார் மாவட்டத்தில் தாராபுரம் கூட்டுறவுக் கிராம வேலைத்திட்டத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து தீர்மானம் எடுப்பதற்காக குழு ஒன்றை நியமித்தல் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்தல். |
| 96 | 2025/12/29 | இணை அமைச்சரவை விஞ்ஞாபனம்<br>உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு - கூட்ட இல 23 |

அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக, பிரதமர் அலுவலகத்தின் அரச சேவை ஆட்சேர்ப்பு மீளாய்வுக் குழுவிடமிருந்து, நுகர்வோர் விவகார அதிகார சபை, இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, லங்கா சதொச லிமிடெட், கூட்டுறவு மொத்த வர்த்தகக் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக (நானாவித) கூட்டுத்தாபனம், தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம், இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகம், கம்பனிப் பதிவாளர் திணைக்களம், அளவீடு, தரநிலைகள் மற்றும் சேவைகள் திணைக்களம், மற்றும் லலித் அதுலத்முதலி மகாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் ஆகிய நிறுவனங்களில் நிலவும் பணியாளர் வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், உரிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

## தேசிய மதிப்பீட்டுக் கொள்கையைச் செயற்படுத்துதல்

“இலங்கையில் தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை செயற்படுத்துவதில் சகல அரச நிறுவனங்களின் பொறுப்பும் வகிபாகமும்" என்ற தலைப்பிலான வேலைத்திட்டத்திற்கு முகாமை மற்றும் மேற்பார்வைச் சுற்றறிக்கை இல. 01/2024 இற்கிணங்க 2025 ஆம் நிதியாண்டில் அரச வரவு செலவுத் திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்வதற்கான வேலைத்திட்ட மதிப்பீட்டிற்காக முன்மொழிவுகள் கோரப்பட்டன.

தேசிய மதிப்பீட்டுக் கொள்கை நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துகையில், 2025 ஆம் ஆண்டிற்காக, எமது அமைச்சின் கீழ் உள்ள உணவுத் திணைக்களத்தின் கீழ், தம்புள்ளையில் அமைந்துள்ள விவசாய உற்பத்திகளைக் களஞ்சியப்படுத்துவதற்கான 5000 மெட்ரிக் தொன் கொள்ளளவு கொண்ட வெப்பநிலை கட்டுப்படுத்தப்பட்ட களஞ்சியசாலை மதிப்பீட்டு நோக்கங்களுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், இந்தப் பணிக்கான ஒரு சுயாதீனமான மதிப்பீட்டை நடத்துவதற்கு ஒரு ஆலோசனை நிறுவனத்தைத் தெரிவு செய்வதற்கான பெறுகைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, அத்துடன் உரிய ஆதாரக் குழு (Reference Group) மற்றும் முகாமைக் குழு (Management Group) என்பன இனங்காணப்பட்டுள்ளன. இதற்காக, ரூ. 2.5 மில்லியன் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளதுடன், இந்த வேலைத்திட்டம் 2026 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

### 2.2 விசேட அடைவுச் சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

**அடைவுகள்**

- **போஷாக்கிற்கான பல்துறை செயல் திட்டம் (MSAPN)**






போஷாக்கிற்கான பல்துறை செயற்திட்டத்திற்கான (MSAPN) முதல் முன்னோடித் திட்டம் (Pilot Program) செப்டம்பர் மாதம் இரத்தினபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்டது, அதற்குச் சமாந்தரமாக இரண்டாவது நிகழ்ச்சித்திட்டம் நவம்பரில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்றது. எதிர்காலத்தில் நுவரெலியா மாவட்டத்தில் இந்த முன்னோடித் திட்டத்தை நடத்த தேவையான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பல்துறை செயற்திட்டத்தின் தொடக்கவிழா 2025 நவம்பர் 7 ஆம் திகதி நடைபெற்றது. இந்த தொடக்க விழாவில் SUN இன் இலங்கை பிரதிநிதி திருமதி கில்மா தஹாநாயக்க மற்றும் மட்டக்களப்பின் மேலதிக மாவட்ட செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சித்திட்டம் SUN இன் மத்திய பிரதிநிதியால் மேலதிக மாவட்டச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. இது தொடர்பாக ஒரு குறுகிய பயிற்சித் திட்டமும் நடைபெற்றது. 2026 பெப்ரவரி 23 ஆம் திகதி நுவரெலியா மாவட்டத்தில் பல்துறை போஷாக்கு நிகழ்ச்சித்திட்டத்தை செயல்படுத்தத் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன..

• தேசிய தரக் கவுன்சிலை நிறுவுதற்கான செயற்பாட்டுக் குழு மற்றும் தொழில்நுட்பக் குழுவை அமைத்து அதன் நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

• கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்தை மீளத் தாபிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுதல்.

கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்தை மீள முனைப்புடன் செயற்படுத்துவதற்கு ஏற்ற, சாத்தியமான ஒரு வணிகத் திட்டத்தின் அடிப்படையில், அச்சந்தர்ப்பத்தில் வணிக நடவடிக்கைகளை மீளத் தொடங்குவதற்கான அங்கீகாரங்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

• ''தேசிய விவசாயச் சந்தை சேவை லிமிடெட்'' (National Agri Market Services limited) தாபித்தல்.

தற்போது நாடு முழுவதும் பரவலாகவுள்ள 18 விசேட பொருளாதார மத்திய நிலையங்களை திறமையாகவும் பயனுறுதியுடனும் செயற்படுத்தல் மற்றும் முகாமையிடலின் பொருட்டு ஒரே வணிக மாதிரியின் கீழ் " தேசிய விவசாயச் சந்தை சேவை லிமிடெட்" என்ற அரசுக்குச் சொந்தமான நிறுவனம் தாபிக்கப்பட்டது.

இந்த நிறுவன ஸ்தாபனத்தின் ஊடாக விவசாயிகள், வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோருக்கு சந்தையை விரிவுபடுத்துதற்கும் விற்பனை மற்றும் கொள்வனவு வசதிகளை விரிவுபடுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது..

• வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் செயற்பாடுகள் குறித்த வழிகாட்டுதல்களை வழங்குதல்

• தற்போதைய கூட்டுறவு இயக்கத்தை மறுசீரமைப்பதற்கான புதிய சட்டக் கட்டமைப்பைத் தயாரித்து செயல்படுத்துதல். கூட்டுறவு சங்கங்களை, நிறுவுவதற்கும் நிதியளிப்பதற்கும் ஒரு புதிய சட்டக் கட்டமைப்பை நிறுவுதல்.

• புவியியல் குறிகாட்டிளை தொடர்புடைய சட்ட, ஒழுங்குவிதிகளின் கீழ் பதிவு செய்தல், 2025 முதல் ஆரம்பிக்கப்பட்டது.

• உணவுப் பாதுகாப்பிற்கான தரம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சுடன் இணைந்து BESPA (Based Best Practices of Agri - Food Sector Development) வேலைத்திட்டத்தை செயல்படுத்துதல்.

• அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையே பரஸ்பர தீர்வை வரிச் சலுகைகள் பெறுவதற்காக ஒருங்கிணைத்தல் மற்றும் பேச்சுவார்த்தை நடத்துதல்.

வர்த்தகப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கும், தீர்வை வரி மற்றும் தீர்வை வரி அல்லாத தடைகளைக் குறைப்பதற்கும் ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் விரைவான மற்றும் நேர்மறையான கடப்பாடு குறித்து இலங்கை பிரதிநிதிகள் குழுவினரால் வலியுறுத்தப்பட்டது.



பல பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர், 2025 ஜூலை இல், அமெரிக்க இறக்குமதி வரிகள் 30% ஆகக் குறைக்கப்பட்டதுடன், பின்னர் 2025 ஆகஸ்ட் இல் 20% ஆகக் குறைக்கப்பட்டன. இலங்கை மீது விதிக்கப்பட்டுள்ள சுங்க வரிகளை மேலும் குறைத்தல் தொடர்பாக ஒரு விசேட குழு அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இதன் விளைவாக, இந்தப் பேச்சுவார்த்தைகளின் முடிவில் இலங்கைக்குப் பயனளிக்கும் ஒரு வர்த்தக உடன்படிக்கையை எட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

## சவால்கள்

### தித்வா சூறாவளியால் வர்த்தகம் மற்றும் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட சவால்கள்

தித்வா சூறாவளி இலங்கையின் வர்த்தக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை கடுமையாக பாதித்ததுடன், விநியோகச் சங்கிலிகள், போக்குவரத்து உட்கட்டமைப்பு மற்றும் விவசாய உற்பத்தியையும் சேதப்படுத்தியது. சூறாவளியானது முக்கிய வளரும் பருவத்தில் பயிர்களுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியது, இதனால் உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் பற்றாக்குறை ஏற்பட்டது, மேலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் காய்கறி விலைகள் 100%–350% வரை அதிகரித்தன. லங்கா சதோச நிறுவனமும் கூட்டுறவுத் துறையும் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதில் பெரும் விநியோக சவால்களை எதிர்கொண்டன, குறிப்பாக நாடு முழுவதும் மோசமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில். வீதி வலையமைப்பு கடுமையாக சேதமடைந்தது, விசேடமாக மத்திய மலைநாட்டிற்கும் கொழும்பிற்கும் இடையான போக்குவரத்துக் கட்டமைப்பு கடுமையாக பாதிக்கப்பட்டதுடன் விநியோகம் மற்றும் வழங்கல் என்பவற்றிற்கான தடைகளும் ஏற்பட்டது.

## எதிர்கால இலக்குகள்

i. வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள வாடகை அடிப்படையில் ஏனைய கட்டிடங்களில் இயங்கும் நிறுவனங்கள் உட்பட சகல நிறுவனங்களையும் ஒரே கூரையின் கீழ் நிறுவி, அந்த நிறுவனங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் நுகர்வோருக்குக் கிடைக்கும் சேவைகள் தாமதமின்றி கிடைப்பதை உறுதிசெய்ய அமைச்சின் நேரடி மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்பை வசதிப்படுத்துதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. புதிய கூட்டுறவு சதுக்கக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் ஏறத்தாழ 7 பில்லியன் ரூபா செலவில் 2026 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ii. விசேட பொருளாதார மத்திய நிலையங்களை நிர்வகிக்க நிறுவப்பட்ட " தேசிய விவசாயச் சந்தை சேவை லிமிடெட் " இன் சட்ட கட்டமைப்பின் பிரகாரம், விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் 2026 முதல் முறையாக இயக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

iii. வர்த்தக உடன்படிக்கைகளை எளிதாக்குவதற்குத் தேவையான ஒரு கொள்கை கட்டமைப்பை (போட்டித் தன்மையான கொள்கை கட்டமைப்பு, Competition Policy Frame Work) உருவாக்குதல் மற்றும் இலங்கை உற்பத்திகளுக்கான சந்தை அணுகலை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் போட்டித் தன்மையான சட்டபூர்வக் கட்டமைப்பு ஒன்றை (Formulation of Competition Legal Framework) விருத்தி செய்தல்

iv. தேசிய தரநிலை கவுன்சிலை (National Quality Council) நிறுவுதல்.

v. கூட்டுறவு இயக்கத்தின் முன்னேற்றம் மற்றும் மேம்பாட்டிற்காக, தற்போதுள்ள கூட்டுறவுச் சட்டம் மற்றும் கூட்டுறவு ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்துதல். மேலும், கூட்டுறவுச் சங்கங்களின் நிதிச் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக, 2026 ஆம் ஆண்டில் கூட்டுறவு நிதி ஒழுங்குபடுத்தற் சட்டத்தை அறிமுகப்படுத்துதல்.

vi. கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் வணிகம் செய்வதை எளிதாக்குவதற்கும் (ease of doing business) e RoC 2 இனை விருத்தி செய்தல்.

vii. இலங்கை திரிபோஷா நிறுவனத்தின் நிலையான அபிவிருத்தி, நவீனமயமாக்கல் மற்றும் பல்வகைப்படுத்தலில் கவனம் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. உலக உணவுத் திட்டத்துடன் மூலோபாய ஒத்துழைப்பு, அரசாங்க ஆதரவு மற்றும் உள்ளகத் திறன் மேம்பாடு மூலம் இலங்கையில் போஷாக்கு பாதுகாப்பை உறுதிசெய்து, பல்வேறு மக்கள் தொகுதிகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு நிறுவனம் எதிர்பார்க்கின்றது.

viii. தம்புள்ளையில் வெப்பநிலை கட்டுப்பாட்டு களஞ்சியசாலையின் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காக ஒரு சூரிய தகடு பொருத்துதல் முறைமையை நிறுவுதல்.

ix. உற்பத்திக் கூட்டுறவு சங்கங்களுக்கு தானியம் உலர்த்தும் இயந்திரங்களை வழங்குவதன் மூலம் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

x. கூட்டுறவுச் சங்கங்களின் வினைத்திறன் மற்றும் பயனுறுதியான செயற்பாட்டை மேம்படுத்த 2026 ஆம் ஆண்டில் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உற்பத்தித்திறன் செயலாற்றுகைப் போட்டி ஒன்றை நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

xi. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் ஒரு முறைமை விருத்தி மற்றும் ஒழுங்குபடுத்தல் ஏற்பாட்டின் மூலம் பயனாளர் உரிமை வெளிப்படுத்துகை செயற்படுத்தப்படும்.

xii. வர்த்தக உடன்படிக்கைகளின் ஊடாக வசதிகளைத் திட்டமிடத் தேவையான கொள்கைக் கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் இலங்கை உற்பத்திகளுக்கான சந்தை அணுகலை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

xiii. நுகர்வோர் நலன், நியாயமான மற்றும் நெறிமுறை சார்ந்த வர்த்தகத்தைப் பாதுகாப்பதற்காக நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்தஞ் செய்தல்.

xiv. அத்தியாவசிய உணவுப் பொருட்களின் களஞ்சியப்படுத்தல் வசதிகளை மேம்படுத்துதல்.

கே. ஏ. விமலேந்திரராஜா
செயலாளர்
வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

K.A. Vimalenthirarajah
Secretary
Ministry of Trade, Commerce, Food Security and Co-operative Development
No. 492, R.A. De Mel Mawatha,
Colombo 03.

## 03 ஆம் அத்தியாயம் - 2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகை

### 3.1. நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ-எப்

**2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

(ரூபா)

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2025 | | குறிப்பு | உண்மை நிலை 2025 | உண்மை நிலை 2024 | |
|---|---|---|---|---|---|
| - | வருமானப் பெறுகைகள் | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | |
| - | மொத்த வருமானப் பெறுகைகள் (அ) | | - | - | |
| - | வருமானமற்ற பெறுகைகள் | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 966,042,000 | 366,922,144 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 14,048,529 | 50,633,393 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 26,576,294 | 12,806,579 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ) | | **1,006,666,824** | **430,362,116** | |
| - | மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ ஸ்ரீ (அ)(ஆ) | | **1,006,666,824** | **430,362,116** | |
| | திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ) | | **585,329,515** | **22,336** | |
| | தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ ஸ்ரீ (இ)-(ஈ) | | **421,337,309** | **430,339,781** | |
| | கழி : செலவினம் | | | | |
| - | மீண்டுவரும் செலவினம் | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 206,300,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | **5** | 170,086,449 | 199,815,322 | |
| 282,100,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | **6** | 214,689,390 | 181,975,420 | ஏசீஏ-2(ஊ) |
| 729,600,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | **7** | 722,005,718 | 626,139,249 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | **8** | - | - | |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | **9** | - | - | |
| **1,218,000,000** | மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ) | | **1,106,781,558** | **1,007,929,991** | |
| | மூலதனம் செலவினம் | | | | |
| 25,500,000 | முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | **10** | 6,569,126 | 3,252,406 | |
| 8,500,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | **11** | 9,726,314 | 79,650 | |
| - | மூலதன மாற்றல்கள் | **12** | - | 2,452,232 | ஏசீஏ-2(ஊ) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | **13** | - | - | |
| 1,000,000 | திறன் விருத்தி | **14** | 975,660 | 971,566 | |
| 100,000,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | **15** | - | - | |
| **135,000,000** | மொத்த மூலதனம் செலவினம் (எ) | | **17,271,100** | **6,755,854** | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 36,268,897 | 50,322,988 | ஏசீஏ-4 |
| | முற்பணக் கொடுப்பனவுகள் | | 27,332,300 | 21,802,543 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம் | | - | - | |
| | மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ) | | **63,601,196** | **72,125,531** | |
| | மொத்த செலவினம் ஐ ஸ்ரீ (ஊ,எ,ஏ) | | 1,187,653,854 | 1,086,811,377 | |
| **1,353,000,000** | டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ ஸ்ரீ (உ-ஐ) | | (766,316,545) | **(656,471,596)** | |
| | பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி | | (766,371,891) | (656,856,063) | ஏசீஏ-7 |
| - | டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி | | 55,346 | 384,467 | ஏசீஏ-3 |
| | | | (766,316,545) | **(656,471,596)** | |

## 3.2. நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

### 2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

| | | உண்மை நிலை | |
|---|---|---|---|
| | குறிப்பு | 2025 | 2024 |
| | - - | ரூபா | ரூபா |
| **<u>நிதி சொத்துக்கள் அற்றது</u>** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 623,887,321 | 619,360,426 |
| **<u>நிதி சொத்துக்கள்</u>** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 24,756,231 | 24,000,226 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | 55,346 | 384,467 |
| **மொத்த சொத்துக்கள்** | | **648,698,898** | **643,745,119** |
| **<u>தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு</u>** | | | - |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 11,796,250 | (11,180,123) |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 623,887,321 | 619,360,426 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| **<u>நடைமுறைப் பொறுப்புக்கள்</u>** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 12,959,981 | 35,180,348 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | 55,346 | 384,467 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **648,698,898** | **643,745,119** |

பக்க இலக்கம் 07 முதல் 37 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 38 முதல் 46 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். **2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.** அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் படி நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது என்வும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| ............................ | ............................ | ............................ |
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர | பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) |
| பெயர்: | பெயர்: | பெயர் : |
| பதவி : | பதவி : | |
| திகதி : 26/02/2026 | திகதி : | திகதி : 2026/02/26. |
| K.A. Vimalenthirarajah<br>Secretary<br>Ministry of Trade, Commerce, Food Security and Co-operative Development<br>No. 492, R.A. De Mel Mawatha,<br>Colombo 03. | K.A. Vimalenthirarajah<br>Secretary<br>Ministry of Trade, Commerce, Food Security and Co-operative Development<br>No. 492, R.A. De Mel Mawatha,<br>Colombo 03. | නෙලුකා එම් පටබැඳිගේ<br>ප්‍රධාන ගණකාධිකාරී<br>වෙළඳ, වාණිජ හා ආහාර සුරක්ෂිතතා අමාත්‍යාංශය<br>අංක 492, ආර්. ඒ. ද මෙල් මාවත,<br>කොළඹ 03 |

## 3.3 நிதிப் பாய்ச்சல் பற்றிய கூற்று

*ஏசீஏ- சீ*

### 2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | **2025** ரூபா | **2024** ரூபா |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | - |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 42,947,117 | 86,022,570 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 966,042,000 | 366,922,144 |
| வர்த்தகத் திணைக்களத்தால் கட்டுநிதி மாற்றல் | - | 905,383 |
| 2023.12.31 இல் உப கட்டுநிதி தீர்ப்பனவு | 384,467 | 160,560 |
| முற்பணங்களை அறவிடல் | 35,992,262 | 12,013,240 |
| வைப்புக்களின் பெறுகை | 14,048,529 | 50,633,393 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **1,059,414,376** | **516,657,290** |
| | | |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 377,351,035 | 379,007,049 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 333,198 | 69,747,228 |
| மூலதனச் சொத்துகளின் புனரமைப்பு, மூலதன மாற்றங்கள், திறன் வளர்ப்பு மற்றும் பிற மூலதனச் செலவினங்கள் | 7,544,786 | - |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 827,864 | 936,350 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 585,713,982 | 22,336 |
| முற்பணக் கொடுப்பனவு | 46,366,024 | 11,933,251 |
| வைப்புக் கொடுப்பனவு | 36,268,897 | 50,322,988 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **1,054,405,786** | **511,969,202** |
| | | |

| | | |
|---|---|---|
| **தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **5,008,590** | **4,688,088** |
| | | |
| **<u>முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்</u>** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | - | - |
| | | |
| **<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:</u>** | | |
| மூலதனச் சொத்துகளின் நிர்மாணம் கொள்முதல் மற்றும் இதர முதலீட்டு பெறுதல்கள் | 4,953,244 | 4,303,622 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **4,953,244** | **4,303,622** |
| | | |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(4,953,244)** | **(4,303,622)** |
| | | |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | **55,346** | **384,466** |
| **<u>நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | - | - |
| | | |
| ***<u>கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:</u>*** | | |
| உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | - | - |
| | | |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | - | - |
| | | |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)** | **55,346** | **384,467** |
| **ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | **55,346** | **384,467** |

## 3.4 நிதிக் கூற்றுகளிற்கான குறிப்புகள்

### அறிக்கையிடலின் அடிப்படை

1) தயார்ப்படுத்தலின் நோக்கம்

2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2) அறிக்கையிடற் காலம்

2025 ஜனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையான காலப்பகுதி, இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலமாகும்.

3) அளவீட்டு அடிப்படை

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

4) வருமானத்தை அடையாளங்காணுதல்

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

5) சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறுமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

6) சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்

இந்த ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

7) காசு மற்றும் காசுக்கு சமமானவை

2025 டிசம்பர் 31 ஆம் திகதியன்று காசு மற்றும் காசுக்கு சமமானவையாக உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

* ஒரு குறிப்பிட்ட அறிக்கையிடல் நிறுவனத்திற்கு குறிப்பிட்ட பரிவர்த்தனைகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் பொருத்தமான தகவல்களை உள்ளடக்கலாம் மற்றும் மாதிரிப்படிவங்களில் தேவைக்கேற்ப திருத்தங்களைச் செய்யலாம். அந்த குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்கு தேவையான வெளிப்படுத்தல் "அறிக்கையிடலின் அடிப்படை" என்பதற்குக் கீழ் சேர்க்கப்படலாம்

* அறிக்கையிடல் நிறுவனத்திற்கு தொடர்புடைய கணக்கியல் கொள்கைகள் மட்டுமே "அறிக்கையிடலின் அடிப்படை" இன் கீழ் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

## 3.5. வருமான சேகரிப்புச் செயலாற்றுகை

வருமானம் சேகரித்தல் ஏற்புடையதன்று.

## 3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு | | உண்மைச் செலவினம் (ரூ. மில்.) | ஒதுக்கீட்டுப் பயன்பாடு, இறுதி ஒதுக்கீட்டின் % ஆக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஏற்பாடு (ரூ. மில்.) | இறுதி ஏற்பாடு (ரூ. மில்.) | | |
| மீண்டெழும் | 1218 | 1215.2 | 1106.78 | 91.07% |
| மூலதன | 135 | 137.8 | 17.27 | 12.53% |

## 3.7 நி.பி. குறிப்பு 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இந்த அமைச்சின் செலவினத்திற்கான ஒதுக்கீடு

இல்லை

## 3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ரூ.மில்.

| ஆதன குறியீடு | குறியீட்டு விபரம் | 2025.12.31 ஆம் திகதியளவில் பொருட்கணக்கீட்டு அறிக்கையின் படி மீதி | 2025.12.31 ஆம் திகதியளவில் நிதி நிலைமை அறிக்கைப்படி மீதி | எதிர்காலத்தில் கணக்கிடப்பட வேண்டியது | அறிக்கையிடல் முன்னேற்றம் % ஆக |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடங்களும் அமைப்புகளும் | - | 341.45 | - | - |
| 9152 | இயந்திர, உபகரணம் - நிதி | | - | | |
| 9152 | இயந்திர, உபகரணம் - தலைப்பு | - | 282.43 | - | - |
| 9153 | காணி | - | - | - | - |
| 9154 | தொட்டுணரா சொத்துகள் | - | - | - | - |
| 9155 | உயிரியல் சொத்துகள் | - | - | - | - |
| 9160 | நடைமுறைப் பணி | - | - | - | - |
| 9180 | குத்தகை வழங்கப்படும் சொத்து | - | - | - | - |

## 3.9. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } TAC/F/MT/2025/FS/69    ඔබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } 2026 මැයි 29 දින

**மொழி பெயர்ப்பு பிரதி**

**தலைப்பு 116 - வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பற்றி 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை**

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 116 - வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின்; 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்படுகிறது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் (திருத்தப்பட்ட) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை காலக் கிரமத்தில் வழங்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை பாராளுமன்றத்திற்கு உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல்;, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது

அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 டிசம்பர் 17 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 02/2025 இன் பிரகாரம் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசெம்பர் 17 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 02/2025 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சு வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்;.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு

செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல்; அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டது..
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 நிதியல்லாச் சொத்துகள்

(அ) 2025 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரித்து அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த மொத்தப் பெறுமதி ரூ. 160,625,000 பெறுமதியான 9 வாகனங்கள் சொத்துகள், பேரேட்டில் (CIGAS) உள்ளடக்கப்பட்டு, நிதியல்லாச் சொத்துகளின் கீழ் கணக்கிடப்படவில்லை.

(ஆ) 2024 ஆம் ஆண்டில் லங்கா சதோச நிறுவனத்திற்கு உரித்து மாற்றப்பட்ட ரூ. 25,500,000 மொத்த பெறுமதியுள்ள இரண்டு வாகனங்கள், மீளாய்வு வருட இறுதியில் சொத்துப் பதிவேட்டிலிருந்து (CIGAS) நீக்கப்படாமல், நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் தொடர்ந்து இருந்தன.

(இ) மீளாய்வு வருடத்தில் அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தால் ரூ. 217,018,775 என மதிப்பிடப்பட்ட பிலியந்தல, எம்பிலிப்பிட்டிய, கந்தஹந்திய மற்றும் குருந்துவத்த ஆகிய 4 பொருளாதார மத்திய நிலையங்களில் உள்ள கட்டிடங்கள், மதிப்பீட்டு அறிக்கைகளுக்கு இணங்க அவற்றைக் கணக்கிடுமாறு அரச கணக்குகள் திணைக்களத்திலிருந்து அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தபோதிலும், மீளாய்வு வருட இறுதியில்கூட CIGAS சொத்துப் பதிவேட்டில் நிதியல்லாச் சொத்துக்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வு வருடத்தில் தேசிய மாணவர் படைக்கு வழங்கப்பட்ட ரூ. 505,100 பெறுமதியுள்ள 37 சொத்து விடயங்களும், பெறுமதி இனங்காணப்படாத 4 சொத்து விடயங்களும், மீளாய்வு வருட இறுதி வரையிலும் CIGAS இன் சொத்துப் பதிவேட்டிலிருந்து நீக்கப்படவில்லை. எனவே, அந்தச் சொத்துக்களின் பெறுமதி நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் தொடர்ந்து காணப்பட்டது.

(உ) 2023 ஆம் ஆண்டில் அமைச்சினால் 10 வெளியக அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட, ரூ. 1,193,790 பெறுமதியுள்ள 99 பொருட்களின் விடயங்களும், பெறுமதி இனங்காணப்படாத 50 பொருட்களின் விடயங்களும், மீளாய்வு வருட இறுதியில்கூட CIGAS சொத்துப் பதிவேடு மற்றும் நிதிநிலை அறிக்கைகளிலிருந்து நீக்கப்படவில்லை. எனவே, அந்தச் சொத்துக்களின் பெறுமதி நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் தொடர்ந்து காணப்பட்டது.

#### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணத் தவறியமை

நிதிப் பிரமாணம் 1647 (e) இன் படி, வாகனங்களுக்குப் பொறுப்பான அலுவலர்கள், தங்கள் பொறுப்பில் உள்ள மோட்டார் வாகனங்கள் தொடர்பில் ஒவ்வொரு வாகனத்தின் வகை மற்றும் மொடல், பதிவு

இலக்கம், அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட திகதி, கைமாற்றப்பட்ட திகதி, அதன் விபரங்கள் மற்றும் பிற தொடர்புடைய தகவல்கள் என்பவற்றைக் கொண்ட பதிவேட்டைப் பராமரிக்க வேண்டிய போதிலும், அத்தகைய வாகனப் பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. ஏனைய சட்டத் தேவைகள் குறித்த அறிக்கை**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1)(d) இற்கு இணங்க பின்வருவனவற்றை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக் கூற்றுகள் முந்தைய ஆண்டுடன் ஒத்துப்போகின்றமை

(ஆ) . முந்தைய வருடத்திற்குரிய நிதிக் கூற்றுகள் தொடர்பில் என்னால் கீழே குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முந்தைய வருடத்தின் முகாமைத்துவ அறிக்கையின் பந்தி இல. | செயற்படுத்தப்படாத பரிந்துரை | இந்த அறிக்கையின் பந்தி இல. |
|---|---|---|
| 1.2.1 (அ) (i) | அமைச்சினால் கையகப்படுத்தப்பட்ட வாகனங்களின் சரியான பெறுமதியைக் கணக்கிடுதல் | 1.6.1 (அ) |
| 1.2.1 (அ) (ii) | அமைச்சகத்திற்குச் சொந்தமில்லாத வாகனங்கள் சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து தாமதமின்றி அகற்றப்படுதல் | 1.6.1 (ஆ) |
| 1.2.1 (அ) (iii) | அமைச்சிற்குச் சொந்தமான மற்றும் சொந்தமில்லாத சொத்துக்களைத் சரியாக இனங்கண்டு, அதற்கேற்ப அவற்றை நிதிக் கூற்றுகளில் உள்ளடக்குதல் அல்லது நீக்குதல். | 1.6.1 (இ) |

**3. நிதி மீளாய்வு**

**3.1 செலவு முகாமை**

நிதிப் பிரமாணம் 50 (ii) இற்கு இணங்க மதிப்பீடுகள் முடிந்தவரை சரியாகவும் முழுமையாகவும் தயாரிக்கப்பட வேண்டும் என்றபோதிலும், பின்வரும் நிகழ்வுகளில் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(அ) மீளாய்வு ஆண்டில், ரூ. 1,11,500,000 பெறுமதியான 03 மூலதனச் செலவின விடயங்களுக்கும், ரூ. 1,900,000 பெறுமதியான 05 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் வழங்கப்பட்ட மொத்த ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 15 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 63,650,000 மொத்த நிகர ஒதுக்கீட்டில், ரூ. 41,280,330 ஒதுக்கீடு மீதமிருந்ததுடன், இந்த நிலுவை மொத்த நிகர ஒதுக்கீட்டில் 55 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை இருந்தது.

**3.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படவேண்டிய சான்றுப்படுத்தல்**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்படி, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தர் பின்வரும் விடயங்களுக்குச் சான்றளிக்க வேண்டியிருந்தபோதிலும், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(அ) வருடாந்த மற்றும் பிற நிதிக் கூற்றுகள் தேவையான கால எல்லைக்குள் தயாரிக்கப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரால் சான்றுப்படுத்தப்பட

வேண்டியதுடன், அதற்கு மேலதிகமாக, கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பான வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் அறிக்கையின் பத்தி 4.1.4 இல் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் காரணமான அந்த தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தேவையானவாறு, குறிப்பிட்ட கால எல்லையினுள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்கப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தர் இனால் உறுதி செய்யப்பட வேண்டும் என்றபோதிலும், அறிக்கையின் பத்தி 4.3 இற்கு இணங்க கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதிலளிக்கப்படவில்லை.

(ஈ) உள்ளக கணக்காய்வுப் பணியை முறையாகச் செயல்படுத்துவதற்கு ஒரு வினைத்திறன் மிக்க முறைமை இருத்தலை உறுதி செய்ய வேண்டும் என்றபோதிலும், அறிக்கையின் பத்தி 6.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, அந்தத் தேவை நிறைவேற்றப்படவில்லை.

### 3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணக்கமின்மை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்குரிய தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1981 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதித் (திருத்த) சட்டத்தின் ஊடாக திருத்தஞ் செய்யப்பட்ட, 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் 10(1) மற்றும் (2) மற்றும் 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிச் சட்டத்தின் 16(1) பிரிவு மற்றும் "பொருளாதார விசேட மத்திய நிலையங்களின் நிர்வாகத்திற்கான நடத்தைக் கோவைகள்" தொடர்பான DMS/0029/V-III ஆம் இலக்க மற்றும் 2017 நவம்பர் 01 தேதியிட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம்). | தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தின் 12பணியாளர்களும், வேயங்கொட பொருளாதார மத்திய நிலையத்தின் 2 பணியாளர்களும், சேமலாபநிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு செலுத்த வேண்டிய பங்களிப்புகளைச் செலுத்தவில்லை |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் பன்னிரண்டாம் அத்தியாயத்தின் பத்தி இல. 22.4 | அனைத்து சம்பளமற்ற விடுப்புகளின் விபரங்களும் பொதுப் படிவம் 96 இல் மாதாந்த அடிப்படையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தெரிவிக்கப்பட வேண்டிய போதிலும்,. 2022, 2023, 2024 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளுக்கான சம்பளமற்ற லீவு விவரங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்படவில்லை. |
| (இ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதிச் சட்டம் | |
| | (i) 2020 ஆகஸ்ட் 28 தேதியிட்ட 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதி ஒழுங்குவிதிகள் 756(6) மற்றும் 757(1) | ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31 ஆம் தேதிக்கு முன்னர் ஒவ்வொரு வாகனமும் பொருட் கணக்கெடுப்பு சபையால் வாகனப் பதிவேட்டுடன் ஒப்பிட்டுப் பார்த்து பௌதிக ரீதியாக பரிசீலிக்கப்பட வேண்டும் என்ற போதிலும், 2026 மார்ச் 31 ஆம் திகதி வரையில் மீளாய்வு வருடத்திற்கான வாகனக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை |

| | | |
|---|---|---|
| | (ii) நிதி ஒழுங்குவிதி 1645 மற்றும் 2016 டிசம்பர் 29 தேதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை எண் 30/2016 இன் பத்தி இல 5.1 | ஒவ்வொரு வாகனத்திற்கும் பெறப்பட்ட எரிபொருள் விவரங்கள் தொடர்புடைய நாளாந்தப் பதிவேட்டில் முறையாகச் சேர்க்கப்பட வேண்டும் என்றபோதிலும், மீளாய்வு ஆண்டில் 24 வாகனங்களுக்காக அமைச்சினால் பெறப்பட்ட ரூ. 1,306,827 பெறுமதியுள்ள 4,521 லிட்டர் எரிபொருள் நாளாந்த ஓட்டக் குறிப்புகளில் உள்ளடக்கப்படவில்லை. |
| | (iii) நிதி ஒழுங்குவிதி 1647(ஆ) | ஒரு வாகனத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து பழுதுபார்ப்புகளும் லொக் புத்தகங்களில் பதிவு செய்யப்பட வேண்டும் என்றபோதிலும், மீளாய்வு ஆண்டில் 11 வாகனங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூ. 3,234,213 பெறுமதியான 31 பழுதுபார்ப்புகள் தொடர்பான தகவல்கள் லொக் பதிவுப் புத்தகங்களில் பதிவு செய்யப்படவில்லை. |
| (ஈ) | 2009 யூன் 17 ஆம் திகதிய மற்றும் 09/2009(1) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | |
| | (i) 02 ஆம் பிரிவு | அனைத்து அரச பணியாளர்களும் தங்களது பணியிடங்களுக்கு வருவதையும் புறப்படுவதையும் கைரேகை இயந்திரங்கள் மூலம் சரிபார்க்க வேண்டும் என்ற விதி இருந்தபோதிலும், பொருளாதார மத்திய நிலையங்களுக்கு இணைக்கப்பட்ட 18 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இந்த முறையில் தங்களது வருகையையும் புறப்பாட்டையும் உறுதிப்படுத்தாது இருந்ததுடன், 2025 ஆம் ஆண்டிற்காக அந்த அலுவலர்களிற்கு சம்பளமாக ரூ. 11,228,247 அமைச்சிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| | (ii) 03 ஆம் பிரிவு | சேவை நிலையமொன்றில் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாது கைரேகை இயந்திரங்கள் ஒவ்வொரு அலுவலகத்திற்கும் நிறுவப்பட வேண்டும் என்ற போதிலும் தம்புள்ள, நுவரெலியா மற்றும் வெயங்கொட பொருளாதார மத்திய நிலையங்களில் கைரேகை இயந்திரங்கள் 2026 ஏப்ரல் 30 ஆம் திகதியளவிலும் நிறுவப்பட்டிருக்கவில்லை |
| (உ) | 2016 டிசம்பர் 29 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 30/2016 இன் பிரிவு 5.1 | மீளாய்வு வருடத்தில் அமைச்சின் 24 ஒதுக்க வாகனங்களுக்கு எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை |

### 3.4 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) அமைச்சின் தரைத்தளத்தில் அமைந்துள்ள 2,178 சதுர அடி வர்த்தக நிலையமானனது, 2022 ஒக்டோபர் முதல் 2023 ஆகஸ்ட் 22 ஆம் திகதி வரை கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்திற்கும், 2023 ஆகஸ்ட் 23 முதல் மீளாய்வு ஆண்டின் இறுதி வரை ஒரு தனியார் நிறுவனத்திற்கும் வாடகைக்கு விடப்பட்டது. அந்த வர்த்தக நிலையத்தில் நிறுவப்பட்டிருந்த 146 இன்வென்றறிப் பொருட்கள் (குளிரூட்டிகள், தொலைக்காட்சிகள், பணம் அறவிடும் இயந்திரங்கள், அலமாரிகள், கணினிகள்) முறையான பெறுகை நடைமுறையின்றி, தெரிவு செய்யப்பட்ட ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து 2021 டிசம்பர் 29 ஆம் திகதி, ரூ. 20 மில்லியன் தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டன. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள், நிதி ஒழுங்குவிதி 751 இன் படி பொருட் பதிவேடுகளில் சேர்க்கப்படவில்லை. மேலும், 2025 டிசம்பர் 31 ஆம் திகதிய

நிலவரப்படி, அப்பொருட்களிலிருந்து, ரூ. 3,293,800 பெறுமதியுள்ள 13 பொருட்கள் காணாமல் போனது பௌதீகப் பரிசீலனையில் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக, ஏதேனும் சேதம் ஏற்பட்ட உடனேயே அதன் அளவு மற்றும் காரணங்களைக் கண்டறியவும், பொறுப்பானவர்களைத் தீர்மானிக்கவும் நடத்தப்பட வேண்டிய நிதி ஒழுங்குமுறை 104 இன் படியான விசாரணைகள் இன்னும் ஆரம்பிக்கப்படாதிருந்தது.

(ஆ) முறையான பெறுகை நடைமுறை ஏதுமின்றி, குறிப்பிட்ட அந்த வர்த்தக நிலையமானது 2023 செப்டம்பர் 01 முதல் 2025 பிப்ரவரி 28 வரை ஒரு தனியார் நிறுவனத்திற்கு மாதம் ரூ. 2,50,000 என்ற வாடகையில் குத்தகைக்கு விட ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தபோதிலும், அமைச்சினால் அந்த நிலப்பரப்பிற்காகக் கட்டிட உரிமையாளருக்கு மாத வாடகையாக ரூ. 3,26,700 செலுத்தப்பட்டுள்ளது. அதன்படி, 2023 செப்டம்பர் முதல் 2025 பிப்ரவரி மாத இறுதி வரை, அமைச்சிற்கு ரூ. 1,830,600 நட்டம் ஏற்பட்டுள்ளது. இந்த நட்டத்திற்குப் பொறுப்பான தரப்பினரைக் கண்டறிய எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை என்பதுடன், நட்டத்தை ஈடுசெய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(இ) விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளரால் பொருளாதார மத்திய நிலையங்களின் பணிகளுக்காக நியமிக்கப்பட்டிருந்த 18 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அந்த அமைச்சின் விடயதானம் மாற்றமடைந்தமை காரணமாக இந்த அமைச்சுடன் இணைக்கப்பட்டிருந்தனர். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2017 நவம்பர் 01 ஆம் திகதிய, DMS/0029/V-III ஆம் இலக்க விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் நிர்வாகத்திற்கான பணிக் கோவையின் பிரகாரம், அவர்கள் பொருளாதார மத்திய நிலையங்களுக்கு முறைப்படி நியமிக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற போதிலும், அவர்கள் அவ்வாறு நியமிக்கப்படாததுடன், இணைந்த சேவைகளின் பணிப்பாளர் நாயகத்தால் அந்த அலுவலர்களுக்கான முறையான இடமாற்ற கட்டளைகள் இன்னமும் வெளியிடப்படவில்லை. 2006 ஜனவரி 04 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மான இல. 05/2119/027/003 மற்றும் நிமுகாமை நம்பிக்கைப் பொறுப்புப் பத்திரங்களின்படி, பொருளாதார மத்திய நிலையங்களின் பணியாளர்களுக்கான சம்பளம் அந்தந்த மத்திய நிலையங்களின் நிதியத்திலிருந்து வழங்கப்பட வேண்டும் என்றபோதிலும், 2025 ஆம் ஆண்டில் அந்த அலுவலர்களுக்கு அமைச்சிலிருந்து ரூ. 11,228,247 சம்பளம் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்தப் பணம் பொருளாதார மத்திய நிலையங்களிலிருந்து மீளச் செலுத்தப்படவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 திட்டமிடல்

(அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல 02/2020 இன் பத்தி 03 இன் படி, அனைத்து அரச அமைச்சுகளும் திணைக்களங்களும், தமது நிறுவனங்களுக்காக ஒவ்வொரு வருடமும் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைச் செயற்படுத்துவதற்கான வருடாந்திர செயல் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். மேலும், வரும் ஆண்டுக்கான வருடாந்த செயற் திட்டம், உரிய ஆண்டின் டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு, அங்கீகாரத்திற்காக பிரதான கணக்கீட்டு அலுவலரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், அமைச்சும், அதன் கீழ் உள்ள நிறுவனங்களான உணவு ஆணையாளர் திணைக்களம், வர்த்தகத் திணைக்களம், கம்பனிப் பதிவாளர் நாயகம் திணைக்களம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவை, 2025 ஆம் ஆண்டுக்கான செயற் திட்டத்தினை 01 முதல் 10 மாதங்கள் வரை தாமதத்துடன் அங்கீகாரமளிக்கப்படிருந்தன. மேலும், லலித் அதுலத் முதலி மகபொல உயர் கல்விப் பலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த செயற் திட்டத்திற்கு இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும் திகதி வரை அமைச்சின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க அரச வணிகச் சுற்றறிக்கையின் ஊடாக இனங்காணப்பட்ட அரச தொழில்முயற்சி நிறுவனங்களுக்கான நிறுவன ஆளுகை பற்றிய வழிகாட்டுதல்கள் பிரிவு 2.3 இன் படி, அரச தொழில்முயற்சி நிறுவனங்களால், உரிய நிரல்

அமைச்சின் செயலாளர் ஊடாக வருடாந்த செயற் திட்டம் மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஐந்தாண்டு உபாயத்திறன் திட்டத்தையும், அரசியல்யாப்பு நோக்கங்களை அடைவதற்கான தொடர்புடைய திட்டங்களையும், திறைசேரிச் செயலாளர் மற்றும் அரச வர்த்தகத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அல்லது தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு, ஏற்புடையவாறு, சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இந்தத் திட்டங்கள் ஒவ்வொரு வருடமும் அடுத்த ஆண்டு தொடங்குவதற்கு குறைந்தது 15 நாட்களுக்கு முன்னர் பொதுத் திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றபோதிலும், வரையறுக்கப்பட்ட அரச வர்த்தக (நானாவித) கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம் ஆகியவற்றின் செயற் திட்டங்கள் முறையே 03 மாதங்கள் மற்றும் 11 மாதங்கள் தாமதத்துடன் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேலும், நுகர்வோர் விவகார அதிகார சபை, லங்கா சதொச நிறுவனம் மற்றும் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை ஆகியவை மீளாய்வு வருட இறுதி வரையிலும் அந்த ஆண்டிற்கான செயற் திட்டத்திற்கு அங்கீகாரம் பெறப்படிருக்கவில்லை.

### 4.1.2 நோக்கங்களை அடையத் தவறுதல்

(அ) அமைச்சிற்குரிய நோக்கங்களில் பின்வரும் நோக்கங்கள் மீளாய்வு வருடத்தில் நிறைவேற்றப்படாதிருந்தது.

(i) தேசிய வர்த்தகக் கொள்கையொன்று தயாரிக்கப்படல்.

(ii) அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் தொடர்பான தரவுத்தளத்தைப் பராமரித்தல், அந்தத் தரவுத்தளத்தைப் புதுப்பித்தல் மற்றும் தரவுகளையும் வெளியக தகவல் வழங்குநர்களையும் இணைப்பதற்கான ஒரு வழிமுறையை நிறுவுதல்.

(iii) தேசிய புலமைச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான ஒரு பாதுகாப்பு வழிமுறையைச் செயல்படுத்தும்பொருட்டு, வழிகாட்டல்கள் மற்றும் புலமைச் சொத்துக்கள் முறைமை ஒன்றை நிறுவுதல்.

(iv) நுகர்வோரை மேலும் பாதுகாக்கும் பொருட்டு, அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் சட்டங்கள், கட்டளைச் சட்டங்கள் என்பவற்றைப் புதுப்பித்தல் மற்றும் திருத்தத்தை விரைவுபடுத்துதல்.

(ஆ) 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டம், 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க தேசிய தேசிய சொத்துக்கள் சட்டம் மற்றும் 1995 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகுகள், தரநிலைகள் மற்றும் சேவைகள் சட்டம் ஆகியவை மீளாய்வு வருட இறுதியளவிலும் திருத்தப்பட்டு நிறைவு செய்யப்படவில்லை.

### 4.1.3 எதிர்பார்க்கப்படும் அடைவு மட்டத்தை அடையத் தவறுதல்

(அ) மீளாய்வு ஆண்டின் திருத்தப்பட்ட செயற் திட்டத்தில் உள்ளடங்கியுள்ள 6 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 20 வேலைத்திட்டப்பணிகளுக்காக ரூ. 485.95 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2025 டிசம்பர் 31 நிலவரப்படி அவற்றின் பயன்பாடு ரூ. 0 மில்லியன் முதல் ரூ. 59.46 மில்லியன் வரை, அதாவது நிதி முன்னேற்றம் 0 சதவீதம் முதல் 58 சதவீதம் வரை இருந்தது.

(ஆ) மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் தேதி நிலவரப்படி, அமைச்சின் கீழ் உள்ள நுகர்வோர் விவகார அதிகார சபை, லலித் அதுலத் முதலி மகபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம், லங்கா சதொச லிமிடெட், தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம் மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம் ஆகிய 5 நிறுவனங்களுக்கு, மீளாய்வு ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட மூலதன ஒதுக்கீடுகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றங்கள், 2026 மார்ச் 16 ஆம் திகதி வரை அமைச்சினால் பெறப்படாது காணப்பட்டது.

(இ) மீளாய்வு ஆண்டில், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் வர்த்தகத் திணைக்களத்திற்கு முறையே ரூ. 100 மில்லியன் மற்றும் ரூ. 25 மில்லியன் திறைசேரி ஒதுக்கீடுகளின் கீழ் இரண்டு வேலைத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வு ஆண்டின்

டிசம்பர் 31 நிலவரப்படி அவற்றின் பயன்பாடு முறையே ரூ. 54.19 மில்லியன் மற்றும் ரூ. 17 மில்லியனாக இருந்தது. அதன்படி, நிதி முன்னேற்றம் முறையே 55 சதவீதம் மற்றும் 68 சதவீதமாக இருந்தது. மேலும், உணவு ஆணையாளர் திணைக்களத்துக்கு ஒன்று ரூ. 100 மில்லியன் பெறுமதியான இரண்டு வேலைத்திட்டங்களுக்கு திறைசேரி மூலதன ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுருந்தபோதிலும், திட்டங்களில் அதில் ஒன்று செயல்படுத்தப்படவில்லை என்பதுடன் மற்ற வேலைத்திட்டத்திற்கான பயன்பாடு ரூ. 14.3 மில்லியனாகவும், நிதி முன்னேற்றம் ஏறத்தாழ 14 சதவீதமாகவும் இருந்தது.

(ஈ) ஒருங்கிணைந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் அல்லது காலாண்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் மூலம் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்/ வேலைத்திட்டங்கள் குறித்த முன்னேற்றங்கள் கால ரீதியாக மீளாய்வு செய்யப்படவில்லை.

#### 4.1.4 வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2021 நவம்பர் 16 ஆம் திகதிய, 01/2021 ஆம் இலக்க அரச வணிகச் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரசு தொழில் முயற்சி நிறுவனங்களுக்கான செயற்பாட்டுக் கையேட்டின் பத்தி 6.6 இன் படி, நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகள் நிதியாண்டு முடிவடைந்த 05 மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பட வேண்டும் என்றபோதிலும், அமைச்சின் கீழ் உள்ள 04 நிறுவனங்களின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கைகளும், 10 நிறுவனங்களின் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கைகளும் 2026 ஏப்ரல் 30 அம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், 07 நிறுவனங்களின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கைகள் 01 மாதம் முதல் 1 1./2 ஆண்டு வரையிலான தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 4.2 சொத்து முகாமைத்துவம்

(அ) 2021 செப்டம்பர் 28 ஆம் திகதிய, 21/1543/313/053 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் ஊடாக, ஏனைய அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களுக்குச் சொந்தமான, தற்போது அமைச்சினால் பயன்படுத்தப்படும் வாகனங்களை முறையாகக் கையகப்படுத்த அனுமதி பெறப்பட்டிருந்தாலும், 2026 ஜனவரி 16 நிலவரப்படி, அமைச்சினால் பயன்படுத்தப்படும் 16 வாகனங்கள் இந்த அமைச்சினால் கையகப்படுத்தப்படவில்லை.

(ஆ) மீளாய்வு ஆண்டில் அமைச்சிற்குச் சொந்தமான இரண்டு மோட்டார் சைக்கிள்களுக்கான காப்புறுதி மற்றும் பராமரிப்புச் செலவுகளுக்காக ரூ. 1,60,242 செலவிடப்பட்டிருந்தபோதிலும், அந்த மோட்டார் சைக்கிள்கள் மீளாய்வு ஆண்டில் அலுவலகப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படவில்லை. தாபன விதிக்கோவை மற்றும் சுற்றறிக்கைகளில் அதற்கான ஏற்பாடுகள் இல்லாதபோதிலும், அந்த மோட்டார் சைக்கிள்களில் ஒன்று சாரதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 4.3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கத் தவறியமை

மீளாய்வு ஆண்டு தொடர்பாக வெளியிடப்பட்ட பின்வரும் 03 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு அமைச்சினால் பதிலளிக்கப்படவில்லை.

| | ஐயவினா இல. | விடயங்கள் | வெளியிடப்பட்ட திகதி |
|---|---|---|---|
| (அ) | TAC/F/MT/2025/AQ/02 | 2018 மார்ச் 19 ஆம் திகதிய தேசிய கணக்காய்வுச் சட்ட ஏற்பாடுகள் செயற்படுத்தப்படாமை | 2026 மார்ச் 06 ஆம் திகதி |
| (ஆ) | TAC/F/MT/2025//AQ/03 | அமைச்சின் திட்டங்களைத் தயாரித்தல், அங்கீகாரம் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் | 2026 மார்ச் 31 ஆம் திகதி |

| | | | |
|---|---|---|---|
| | | அவற்றின் முன்னேற்றப் பரிசீலனை - 2025 | |
| (இ) | TAC/F/DEC/24/PA/31/AQ/04 | விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் அதற்கு 27 சம்பந்தமான தரப்பினர் பற்றிய பரிசீலனை - 2025 | 2026 ஏப்ரல் 27 ஆம் திகதி |

**4.4 முகாமைத்துவ நலிவுகள்**

(அ) 2024 நவம்பர் 25 ஆம் திகதிய 2412/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக, சகல விசேட பொருளாதார மத்திய நிலையங்களும் அமைச்சின் கீழ் ஒதுக்கிடப்பட்டுள்ளதுடன், நுவரெலியா, கெப்பெட்டிபொல, தம்புள்ளை, மீகொட, வெலிசற, வெயங்கொட, நாரஹேன்பிட்ட, ரத்மலான மற்றும் பிலியந்தல ஆகிய விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

i. விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் நிர்வாகத்திற்காக, 2006 ஜனவரி 04 ஆம் திகதிய 05/2119/027/003 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, முகாமைப் பொறுப்புகள் நிறுவப்பட்டுள்ளதுடன், அவற்றைப் பராமரிப்பதற்கான சட்ட ஆவணம் நம்பிக்கைப் பொறுப்புப் பத்திரம் ஆகும். கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான 2025 செப்டம்பர் 30 அன்று, அந்த பொறுப்புப் பத்திரங்களின் காலம் 8 முதல் 22 ஆண்டுகள் வரை இருந்தபோதிலும் அவை இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ii. பொருளாதார மத்திய நிலையங்கள் அமைந்துள்ள காணிகளின் உரிமை பல்வேறு திணைக்களங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் வசம் இருந்தபோதிலும், அவற்றை அமைச்சின் கீழ் கையகப்படுத்தவோ அல்லது அவற்றைக் கையகப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iii. நாரஹேன்பிட்ட பொருளாதார மத்திய நிலையத்தில் களஞ்சிய வாடகை வருமானம் ஈட்டிய 12 களஞ்சியங்களில், 9 களஞ்சியங்கள் நன்கொடைப் பத்திரம் ஒன்றின் மூலம் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், 2022 ஏப்ரல் 01 ஆம் திகதியளவில், அவற்றுள் 4 களஞ்சியசாலைகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ. 22,491,575 பெறுமதியான நிலுவைக் களஞ்சிய வாடகை, 2025 செப்டம்பர் 30 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

iv. 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொதுச் சொத்துக்கள் விடயத்தில் புரியப்படும் குற்றங்கள் பற்றிய சட்டத்தின் படி, வணிக வளாகங்கள் அரசாங்கச் சொத்தாக உள்ளதுடன், குத்தகை உடன்படிக்கைகள் மற்றும் குத்தகைப் பத்திரங்களின்படி, குத்தகைதாரர்கள் அந்த வளாகங்களை உபகுத்தகைக்கு விடவோ, விற்கவோ, மாற்றவோ அல்லது கையகப்படுத்தடுத்தலோ புரியக்கூடாது என்ற போதிலும், கணக்காய்வுத் தினத்தன்று, தம்புள்ளையைத் தவிர்த்து ஏனைய 08 பொருளாதார மத்திய நிலையங்களில் 183 வணிக வளாகங்கள் உபகுத்தகைக்கு விடப்பட்டிருந்ததோடு நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் உள்ள 58 வணிக வளாகங்கள் மூலக் குத்தகைதாரர்களால் விற்கப்பட்டிருந்தன.

v. கணக்காய்விற்குட்பட்ட பொருளாதார மத்திய நிலையங்களில் உள்ள வணிக வளாகங்களின் மொத்த எண்ணிக்கை 1053 ஆகும். அவற்றில் 623 வளாகங்கள், குத்தகை உடன்படிக்கைகள் இன்றி முகாமைப் பொறுப்புகளால் குத்தகைக்கு விடப்பட்டிருந்தன. 2025 செப்டம்பர் 31 நிலவரப்படி, அவற்றுள் 241 வளாகங்களின் குத்தகை உடன்படிக்கைகள் காலாவதியாகியிருந்தன.

vi. கணக்காய்வுத் தினமான 2025 செப்டம்பர் 30 ஆம் திகதியன்று, கணக்காய்விற்குட்பட்ட 07 பொருளாதார மத்திய நிலையங்களின் வணிக வளாகங்கள் மற்றும் தண்டப்பணங்களின் மொத்த நிலுவைத் தொகை ரூ. 76,504,103 ஆக இருந்ததுடன், அதில் ரூ. 29,516,391 நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்தது. மேலும், நாரஹேன்பிட்ட பொருளாதார மத்திய நிலையத்தின் 03 களஞ்சியசாலைகளிலிருந்து களஞ்சிய வாடகை ரூ. 86,509,280 அறவிட வேண்டியிருந்ததுடன், அதில் ரூ. 43,125,780 நிலுவைத் தொகை நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்தது.

vii. தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்குரிய 2017 ஜனவரி 24 ஆம் இலக்க முகாமைப் பொறுப்புப் பத்திரத்தின் பத்தி 7(அ) இன் படி, நிறுவுனரின் அனுமிதியின்றி நிலுவைத் தொகையை

வெட்டி நீக்க இயலாதென்ற போதிலும், 2025 ஜனவரி 31 ஆம் திகதி நடைபெற்ற முகாமைப் பொறுப்புக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், முந்தைய ஆண்டுகளுக்கான கடை வாடகை மற்றும் தண்டப்பணத் தொகைகளான முறையே ரூ. 1,860,385 மற்றும் ரூ. 9,717,723 என மொத்தம் ரூ. 11,578,108 கணக்குகளிலிருந்து வெட்டி நீக்கப்பட்டிருந்தது.

viii. தம்புள்ள விசேட பொருளாதார மத்திய நிலையத்தினால் பல்வேறு குத்தகை ஒப்பந்தங்கள் செய்யப்பட்டபோதிலும், 2019 ஆம் ஆண்டளவில் பெரும்பாலான குத்தகை ஒப்பந்தங்களின் குத்தகைக் காலம் முடிவடைந்ததன் காரணமாக, 149 வணிக வளாகக் குத்தகைதாரர்கள், மதிப்பிடப்பட்ட வாடகையை விடக் குறைவான வாடகையை முகாமைப் பொறுப்பிற்கு செலுத்தியிருந்தனர். அதன்படி, முகாமைப் பொறுப்பிற்கு, அந்த வணிக வளாகங்களிலிருந்து ஆண்டுக்கு ரூ. 29,113,812, அதாவது மாதத்திற்கு ரூ. 2,426,151, வாடகை வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது.

ix. விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் விவசாய உற்பத்திகள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யும் நோக்கத்துடன் நிறுவப்பட்டிருந்த போதிலும், ரத்மலான, நாரஹேன்பிட்ட, மீகொட மற்றும் வெலிசற ஆகிய பொருளாதார மத்திய நிலையங்களில் உள்ள 114 கடைகள், அந்த நோக்கத்திற்குத் தொடர்பில்லாத பொருட்களை விற்பனை செய்வதற்கும் சேவைகளை வழங்குவதற்கும் பயன்படுத்தியிருந்தன.

x. வினைத்திறனான போட்டிதன்மை மிக்க சந்தைகளின் இயந்திரமயமாக்கலை ஆதரிப்பதன் மூலம் இடைத்தரகர்களின் செல்வாக்கைக் குறைப்பதன் ஊடாக, நியாயமான வர்த்தகத்தை ஊக்குவித்தலானது, விசேட பொருளாதார மத்திய நிலையங்களை நிறுவுவதன் நோக்கங்களில் ஒன்றாக இருந்தபோதிலும், 411 வணிக வளாகங்கள் 158 பங்குதாரர்களிடையே பிரிக்கப்பட்டிருந்ததுடன், அதன்படி, ஒரு உரிமையாளருக்கு 7 வளாகங்கள், 5 நபர்களுக்கு 6 வளாகங்கள், 10 நபர்களுக்கு 5 வளாகங்கள், 4 நபர்களுக்கு 4 வளாகங்கள், 32 நபர்களுக்கு 3 வளாகங்கள் மற்றும் 106 நபர்களுக்கு 2 வளாகங்கள் என்றவாறு வணிக வளாகங்கள் பிரிக்கப்பட்டிருந்தன. அதன்படி, போட்டித்தன்மை குறைவாக இருந்தமை மற்றும் வணிகர்களின் பேரம் பேசும் சக்தி அதிகரித்தமை என்பன ஏற்பட்டிருந்தது..

xi. "விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் நிர்வாகத்திற்கான அலுவலக நடைமுறைகள்" என்ற தலைப்பிலான, DMS/0029/V-III ஆம் இலக்க மற்றும் 2017 நவம்பர் 01 தேதியிட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் 04(III) இன் பிரகாரம், மத்திய நிலையங்களின் பணியாளர்களை நியமிக்கும் அதிகாரியாக இவ்விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரே செயல்பட வேண்டும் என்றபோதிலும், தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தின் முகாமையாளரால் இரண்டு முகாமை உதவியாளர் பதவிகளுக்கும், மீகொட மற்றும் பிலியந்தல பொருளாதார மத்திய நிலையங்களில் அதற்குரிய முகாமைப் பொறுப்புகளின் செயலாளர்களால் முறையே இரண்டு தொழிலாளர் பதவிகள் கொண்ட நான்கு பதவிகளுக்கும் நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

xii. பொருளாதார மத்திய நிலைய முகாமைப் பொறுப்புப் பத்திரங்கள் 11 (ஆ) மற்றும் (ஈ) இன் படி, கணக்கியல் காலம் முடிவடைந்த 3 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நாரஹேன்பிட்ட, மீகொட, வெயங்கொட மற்றும் பிலியந்தல பொருளாதார மத்திய நிலையங்களின் 2025 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகளும், மீகொட, வெயங்கொட மற்றும் பிலியந்தல பொருளாதார மத்திய நிலையங்களின் 2024 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளும், பிலியந்தல பொருளாதார மத்திய நிலையத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளும் இந்த அறிக்கையின் திகதி வரை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

xiii. பொருளாதார மத்திய நிலையங்கள் தொடர்பாக அமைச்சினால் உள்ளக கணக்காய்வுகள் நடத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2024 நவம்பர் 25 ஆம் திகதிய 2412/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக, அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் வரையறுக்கப்பட்ட அரச வர்த்தக (கூட்டுறவு) மொத்த விற்பனை நிறுவனம் என்ற பெயரில் அரச நிறுவனம் ஒன்றாக, அமைச்சின் கீழ் மாற்றப்பட்டிருந்தது. எனினும், 21/1313/313/045 ஆம் இலக்க மற்றும் 2021 ஒகஸ்ட் 02 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, மேற்கூறிய நிறுவனங்களை கலைக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்ட உத்தரவுகள் 2026 ஏப்ரல் 30 இற்குள் செயல்படுத்தப்படவில்லை. மேலும், மேற்படி நிறுவனத்தின் சார்பாக திறைசேரியால் வழங்கப்பட்ட பிணைப்பொறுப்பின் பொருட்டு மக்கள் வங்கிக்கு, 2013 மே

22 ஆம் திகதி செலுத்த வேண்டிய ரூ. 31,485,686 நிலுவைத் தொகையைத் தீர்ப்பது தொடர்பான விவரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) அமைச்சின் கீழ் உள்ள இலங்கை தேசிய புலமைச் சொத்துகள் அலுவலகம் தொடர்பாக 2024 ஆகஸ்ட் 08 அன்று நடைபெற்ற அரச கணக்குகள் பற்றிய குழுவின் (COPA) கூட்டத்தில் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு வழங்கப்பட்டிருந்த கட்டளைகளான, இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகத்திடமிருந்து சேர்வர் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காகச் செலுத்தப்பட்ட ரூ. 32.5 மில்லியன் தொகையை 03 மாதங்களுக்குள் மீள அறவிடுதல், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் பராமரிக்கப்படும் தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க ஒத்துழைப்பு மத்திய நிலையங்களின் செயல்பாட்டிற்காக பொருத்தமான முன்மொழிவு மற்றும் கருத்துரு அறிக்கையைக் குழுவிடம் சமர்ப்பித்தல் என்பன, 2026 ஏப்ரல் 30 அளவில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5 நிலைபேறான அபிவிருத்தி

(அ) நிலையான அபிவிருத்தி இலக்குகளின் செயலாற்றுகை இலக்கு 3 இன் கீழ், சந்தையில் உணவுப் பற்றாக்குறையைத் தடுக்கும் நோக்கத்தில், தம்புள்ள களஞ்சியசாலை வளாகத்தின் நிர்மாணம் மற்றும் செயல்பாட்டின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம், 2025 டிசம்பர் 31 நிலவரப்படி 75 முதல் 100 சதவீதம் வரை இருந்ததாக, மீளாய்வு ஆண்டிற்கான அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. மரக்கறி மற்றும் பழங்கள் களஞ்சியப்படுத்தல் மற்றும் பதப்படுத்தும் வளாகத்தின் நிர்மாணம் மற்றும் செயல்பாடு அதன் அடைவுச் சுட்டெண்ணாடாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இருப்பினும், 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இப்பணியின் மதிப்பிடப்பட்ட கால எல்லையை விட 4 1/2 ஆண்டுகள் தாமதமாகக் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டிருந்தபோதிலும், அதன் செயற்பாடு 2026 ஏப்ரல் 30 அளவிலும் ஆரம்பிக்கப்படவில்லை.

(ஆ) உணவுப் பற்றாக்குறையைத் தடுக்கும் பொருட்டு உணவுப் பாதுகாப்பு இருப்பைப் பேணும் நோக்கத்தில், பாதுகாப்பான அரிசி இருப்பு பராமரிக்கப்படவில்லை என்பதுடன், ஏனைய அத்தியாவசிய உணவுப் பொருட்களின் பாதுகாப்பான இருப்பை உள்நாட்டு ரீதியாகப் பராமரிப்பதற்கான முறைசார் முறைமைகளும் நிறுவப்பட்டிருக்கவில்லை.

## 6 நல்லாளுகை

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

2018 ஆம் ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 40 மற்றும் 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைச் சட்டத்தின் பிரிவு 33 ஆகியவற்றின்படி, உணவு ஆணையாளர் திணைக்களம், கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு மற்றும் வர்த்தகத் திணைக்களம் ஆகிய மூன்று நிறுவனங்களுக்கும் உள்ளக கணக்காய்வாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**ஒப்பம்/ எம்.. டி. சுதர்ஷனி அமரதுங்க**
பிரதிக் கணக்காய்வாளர் தலைமையதிபதி
கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பொருட்டு

# 04. ஆம்அத்தியாயம்- செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

## 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (செயற் திட்ட அடிப்படையில்)

| விசேட குறிகாட்டிகள் | எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மை வெளியீடு | | |
|---|---|---|---|
| | 100%-90% | 75%-89% | 50%-74% |
| நுகர்வோர் பாதுகாப்பு | ✓ | | |
| சந்தைச் சமநிலை | ✓ | | |
| வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளை ஊக்குவித்தல் | ✓ | | |
| தேசிய புலமைச் சொத்துப் பாதுகாப்பு | ✓ | | |
| உயர் கல்வி வாய்ப்புகளை மேம்படுத்தல் | ✓ | | |
| கம்பனிகள், சங்கங்களைப் பதிவு செய்தல் | ✓ | | |

## 05. ஆம் அத்தியாயம் - நிலைபேறான அபிவிருத்தி இலக்கை (SDG)அடைவதற்கான செயலாற்றுகை

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கை (SDG)அடைவதற்கான செயலாற்றுகை

| இலக்கு/ நோக்கம் | நோக்கம் | அடைவுக்கான குறிகாட்டிகள் | இதுவரை அடைவிற்கான வளர்ச்சி(%) | | |
|---|---|---|---|---|---|
| | | | 0 - 49 | 50-74 | 75-100 |
| **இலக்கு(1)**<br>நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதன் மூலமும் சலுகை விலை நிர்ணயம் மூலமும் வறுமையை குறைக்கும் வேலைத்திட்டத்தை மேற்பார்வையிடல் | உள்நாட்டு உற்பத்தியாளர் மற்றும் தொழில் முயற்சியாளரை ஊக்குவித்தல் | உள்ளூர் விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான இறக்குமதி வரிகள் குறித்த பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகளை அவ்வப்போது வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைகள்திணைக்களத்துக்கு சமர்ப்பிப்பதன் மூலம் உள்ளூர் விவசாயிகளையும் நுகர்வோரையும் பாதுகாத்தல். | | | ✓ |
| | | உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் குறைகள் தொடர்பாக பெறப்படும் அனைத்து பிரதிநிதித்துவங்களையும் தொடர்புடைய நிறுவனங்களுக்கு அனுப்பி, தீர்வுகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்க நடவடிக்கை எடுத்தல். | | | ✓ |
| **இலக்கு (2)**<br>சகல பெண்களுக்கும் ஆண்களுக்கும் பல்கலைக்கழகக் கல்வி உட்பட உயர்தரமான மற்றும் குறைந்த விலையில் தொழில்நுட்ப, தொழில்சார் கல்வி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி கிடைப்பதை உறுதி செய்தல். | உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்குகல்வி வாய்ப்புகளை ஊக்குவித்தல் | உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி பயிலும் மாணவர்கள் தங்கள் கல்வியை வெற்றிகரமாக முடிப்பதற்கும், எதிர்கால வேலைவாய்ப்புச் சந்தைக்கு ஏற்ற நிபுணர்களை உருவாக்குவதற்கும் வாய்ப்புகளை வழங்குதல். | | | ✓ |

| இலக்கு/ நோக்கம் | நோக்கம் | அடைவுக்கான குறிகாட்டிகள் | இதுவரை அடைவிற்கான வளர்ச்சி(%) | | |
|---|---|---|---|---|---|
| | | | 0 - 49 | 50-74 | 75-100 |
| **இலக்கு(3)**<br>உணவு பற்றாக்குறை ஏற்படா வண்ணம் உணவு இருப்பை பேணுதலை மேற்பார்வையிடல் | வர்த்தக சந்தையினுள் உணவு பற்றாக்குறை ஏற்படுவதை தடுத்தல்<br><br>உணவு பாதுகாப்பான இருப்பை வைத்துக் கொள்ளல். | காய்கறிகள் மற்றும் பழங்களை சேமித்து பாதுகாப்பதற்கான வெப்பக் கட்டுபாட்டு சேமிப்பு வளாகத்தின் நிர்மாணம் மற்றும் செயற்பாடு.<br>பாதுகாப்பான அரிசி இருப்புகளைப் பராமரித்தல்.<br>உப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் எழுப்பிய கரிசனைகளுக்கு பதிலளிக்கும் விதமாக, உள்ளூர் சந்தையில் மேசை உப்பு பற்றாக்குறை ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, அரச வர்த்தக (இதர) கூட்டுத்தாபனம், 30,000 மெட்ரிக் தொன் அயடின் சேர்க்காத உப்பை இறக்குமதி செய்வதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தை 2024.12.18 ஆம் திகதி பெற்று பெறுகைச் செயன்முறையை ஆரம்பித்தமை | | | ✓<br><br>✓ |
| **இலக்கு(4)**<br>சந்தையில் பொருட்களின் விலைகள் அசாதாரணமாக அதிகரித்துள்ள சூழ்நிலைகளில், காய்கறிகள் மற்றும் பழங்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் வாழ்க்கைச் செலவைக் குறைந்த மட்டத்தில் பராமரித்தல். | அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதன் மூலம் சந்தைப் பொருட்களின் கிடைக்கும் தன்மையை அதிகரித்தல் | .இந்திய கடன் திட்டத்தின் கீழ் ஒருபில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதியின் கீழ் இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய பொருட்கள்.<br><br>அத்தியாவசிய உணவுப் பொருட்களை நுகர்வோருக்கு பற்றாக்குறையின்றி வழங்கவும், தேவைக்கு ஏற்ப நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்தைப் பராமரிக்கவும், விலை உயர்வால் ஏற்படும் சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்தவும், நுகர்வோருக்கு நிவாரணம் அளிக்கவும் 10 அத்தியாவசிய உணவுப் பொருட்களை திறந்த கணக்குகளின் கீழ் இறக்குமதி செய்வதற்கான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. | | | ✓<br><br>✓ |

## 5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைவதற்கான அடைவுகள் மற்றும் சவால்கள்

**அடைவுகள்**

1. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியின் போதும் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதன் மூலம் சந்தை சமநிலையை உருவாக்க முடிந்தமை.
2. நுகர்வோர் சேவை அதிகாரசபையின் தலையீட்டின் மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்ற இறக்கத்தை ஓரளவு கட்டுப்படுத்த முடிந்தமை.
3. வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளை திறக்க ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்க முடிந்தமை.

**சவால்கள்**

1. நுகர்வோர் விவகார அதிகாரசபையின் இயைபுடைய சேவைகளை வழங்குவதில் போதிய எண்ணிக்கையிலான அலுவலர்கள் இல்லாமை.
2. அளவீட்டு அலகு தரநிலைகள் சேவைகள் துறை மற்றும் புலமைச் சொத்து அலுவலக வேலைகளின் செயல்திறன் நிறைவேற்றுகையில் தேவைப்படும் தொழில்நுட்ப வசதிகள் குறைவடைந்தமை.
3. புலமைச் சொத்துகள் அலுவலக நடவடிக்கை பொருட்டு போதிய பணியாளர்கள் இன்மை.

## 06. ஆம் அத்தியாயம்; மனித வள விபரம்

### 6.1பணியாளர் எண்ணிக்கை முகாமைத்துவம்

| | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை | தற்போதைய பணியாளர் எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|
| சிரேஸ்ட | 31 | 23 | 8 |
| மூன்றாம் | 5 | 2 | 3 |
| இரண்டாம் நிலை | 139 | 81 | 58 |
| ஆரம்ப நிலை | 30 | 24 | 6 |
| தற்காலிக | 4 | 3 | 1 |
| மொத்தம் | 209 | 133 | 76 |

### 6.2 நிறுவனத்தின் செயலாற்றுகையில் மனிதவள பற்றாகுறை அல்லது அதிகரிப்பு பாதித்த விதம்

இந்த அமைச்சின் பணியாளர்களில், 65இரண்டாம் நிலை பதவிகள் வெற்றிடமாக உள்ளன, இதன் விளைவாக, அமைச்சின் அன்றாடப் பணிகளை மேற்கொள்வதில் இரண்டாம் நிலை வெற்றிடங்கள் காரணமாக பணியாளர்கள் சிரமத்தை எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்கள் உள்ளன.

## 6.3 மனித வள அபிவிருத்தி

| வேலைத்திட்டத் தின் பெயர் | பயிற்சி பெற்ற பணியாளர் எண்ணிக்கை | நிகழ்ச்சித்தி ட்டக் கால எல்லை | மொத்த முதலீடு (ரூ.) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை | வெளியீடு/ பெறும் அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| கொள்முதல் வழிகாட்டுதல், திட்டமிடுதல் மற்றும் ஒழுங்கு விதிகள் - நிலுவையில் உள்ளது | 01 | 03 நாட்கள் | 18,000 | - | உள்நாடு | கொள்முதல் வழிகாட்டுதல், திட்டமிடுதல் மற்றும் ஒழுங்கு விதிகள் பற்றிய அறிவு |
| அரசு பணியாளர்களின் சம்பளத் தயாரிப்பு | 01 | 03 நாட்கள் | 6,500 | - | உள்நாடு | அரசு பணியாளர்களின் சம்பளத் தயாரிப்பு பற்றிய அறிவு |
| அரசு பணியாளர்களின் சம்பளத் தயாரிப்பு | 02 | 01 நாள் | 13,000 | - | உள்நாடு | அரசு பணியாளர்களின் சம்பளத் தயாரிப்பு பற்றிய அறிவு |
| புதிய கொள்முதல் வழிகாட்டுதலகள். | 04 | 02 நாட்கள் | 36,000 | - | உள்நாடு | புதிய கொள்முதல் பற்றிய அறிவு |
| அமைச்சரவை ஆவணங்கள் தயாரித்தல் | 01 | 01 நாள் | 5,000 | - | உள்நாடு | அமைச்சரவை ஆவணங்கள் தயாரித்தல் பற்றிய அறிவு |
| திட்ட முன்மொழிவுகள் தயாரித்தல் | 03 | 02 நாட்கள் | 31,500 | - | உள்நாடு | திட்ட முன்மொழிவுகள் தயாரித்தல் பற்றிய அறிவு |
| கொள்முதல் நடைமுறை2024 | 61 | 01 நாள் | 270,000 | - | உள்நாடு | கொள்முதல் நடைமுறை பற்றிய அறிவு |
| பொதுத் துறை கணக்கியல் கொள்கைகள் | 05 | 02 நாட்கள் | 50,000 | - | உள்நாடு | பொதுத் துறை கணக்கியல் கொள்கைகள் பற்றிய அறிவு |
| அரசு பணியாளர்களின் சம்பளத் தயாரிப்பு | 02 | 02 நாட்கள் | 36,000 | - | உள்நாடு | அரசு பணியாளர்களின் சம்பளத் தயாரிப்பு பற்றிய அறிவு |
| IT தொடர்பான பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்முதல் | 04 | 02 நாட்கள் | 40,000 | - | உள்நாடு | IT தொடர்பான பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்முதல் பற்றிய அறிவு |
| வருடாந்திர நில அளவையியல் வாரியப் பயிற்சி | 02 | 02 நாட்கள் | 24,000 | - | உள்நாடு | வருடாந்திர நில அளவையியல் நடத்துவது பற்றிய அறிவு |
| பொது கொள்முதல் மற்றும் ஒப்பந்த நிர்வாகத்தில் டிப்ளோமா | 01 | 01 நாள் | 80,000 | - | உள்நாடு | பொது கொள்முதல் மற்றும் ஒப்பந்த நிர்வாகத்தில் டிப்ளோமா பற்றிய அறிவு |
| அரச வாகனங்களின் பராமரிப்பு | 02 | 01 நாள் | 13,000 | - | உள்நாடு | அரச வாகனங்களின் பராமரிப்பு பற்றிய அறிவு |

| வேலைத்திட்டத் தின் பெயர் | பயிற்சி பெற்ற பணியாளர் எண்ணிக்கை | நிகழ்ச்சித்தி ட்டக் கால எல்லை | மொத்த முதலீடு (ரூ.) | | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை | வெளியீடு/ பெறும் அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| ஆரம்ப கட்ட விசாரணைகள் | 01 | 01 நாள் | 6,500 | - | உள்நாடு | ஆரம்ப கட்ட விசாரணைகள் பற்றிய அறிவு |
| கோவைப் படுத்துதல் | 01 | 01 நாள் | 6,500 | - | உள்நாடு | கோவைப் படுத்துதல் பற்றிய அறிவு |
| அலுவலக மேலாண்மை நிதி ஒழுங்கு முறைகள் | 01 | 02 நாட்கள் | 12,000 | - | உள்நாடு | அலுவலக மேலாண்மை நிதி ஒழுங்கு முறைகள் பற்றிய அறிவு |
| கொள்முதல் சான்றிதழ் பயிற்சி | 01 | 01 நாள் | 30,000 | - | உள்நாடு | கொள்முதல் பயிற்சி பற்றிய அறிவு |
| விடுப்பு தொடர்பான விடயம் பணிகள் மற்றும் பொறுப்புகள் | 01 | 01 நாள் | 6,500 | - | உள்நாடு | விடுப்பு தொடர்பான விடயம் பணிகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிவு |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பத்தின் அடிப்படைள் மற்றும் smart அலுவலகத்திற்கா ன செயற்கை நுண்ணறிவு பயன்பாடு | அமைச்சின் அனைத்து உத்தியோகத்த ர்களும் | 02 நாட்கள் | 141,635 | - | உள்நாடு | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பத்தின் அடிப்படைகள் மற்றும் smart அலுவலகத்திற் கான செயற்கை நுண்ணறிவு பயன்பாடு பற்றிய அறிவு |
| ஊக்குவிப்பு, பணியாளர் திருப்தி மற்றும் வேலை வாழ்க்கை சமநிலை | அமைச்சின் அனைத்து உத்தியோகத்த ர்களும | 01 நாள் | 190,000 | - | உள்நாடு | ஊக்குவிப்பு, பணியாளர் திருப்தி மற்றும் வேலை வாழ்க்கை சமநிலை பற்றிய அறிவு |

## 07.ஆம் அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை

| இல. | நிறைவேற்றப்பட வேண்டிய தேவைப்பாடு | இணக்கப்பாட்டுத் தன்மை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி விளக்குக | எதிர்காலத்தில் இணக்கமின்மையைத் தவிர்க்க முன்மொழியும் சரியான நடவடிக்கை |
|---|---|---|---|---|
| **1** | **பின்வரும் நிதிக்கூற்றுகள்/ கணக்குகள் உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்** | | | |
| 1.1 | வருடாந்த நிதிக்கூற்றுகள் | இணக்கமானது | | |
| 1.2 | அரச அலுவலர் முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.3 | வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வணிக முற்பணக் கணக்குகள்) | இணக்கமற்றது | இவ்வமைச்சில் மேற்படி முற்பணக் கணக்கு பேணப்படவில்லை | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்குகள் | இணக்கமற்றது | | |
| 1.5 | விசேட முற்பணக் கணக்குகள் | இணக்கமற்றது | | |
| 1.6 | **ஏனைய** | இணக்கமற்றது | | |
| **2** | **புத்தகங்கள், ஆவணங்கள் பராமரித்தல் (நி.ஒ.445)** | | | |
| 2.1 | அரச கணக்குச் சுற்றறிக்கை இல 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணுதல் | இணக்கமானது | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவு/ தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வுக் கணக்குப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணுதலை பதிவு செய்தல் | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தலை பதிவு செய்தல் | இணக்கமானது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களை (CIGAS ) தயார் செய்து பொதுத் திறைசேரிக்குச் உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 2.6 | காசோலை, காசுக் கட்டளைப் படிவத்தை இற்றைப்படுத்தி பேணுதலை பதிவு செய்தல் | இணக்கமானது | | |
| 2.7 | பொருட் பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தலை பதிவு செய்தல் | இணக்கமானது | | |
| 2.9 | இழப்புப் பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தலை பதிவு செய்தல் | இணக்கமானது | | |
| 2.10 | பொறுப்புப் பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |

| இல | நிறைவேற்றப்பட வேண்டிய தேவைப்பாடு | இணக்கப்பாட்டுத் தன்மை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி விளக்குக | இணக்கமற்றது. எதிர்காலத்தில் இணக்கமின்மையைத் தவிர்க்க முன்மொழியும் சரியான நடவடிக்கை |
|---|---|---|---|---|
| 2.11 | காசோலை அடிக்கட்டைப் புத்தகங்களின் பதிவேட்டினைப் (GA- N20); புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 03 | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை** பகிரல் **(நி.ஓ.**135) | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன. | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது | இணக்கமானது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11 ஆம் திகதி 171/2004 ஆம் இல. அரச கணக்கு சுற்றறிக்கையின்படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயற்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப் பாட்டுக்குட்பட்டவை | இணக்கமானது | | |
| 4 | **வருடாந்த திட்டங்களினைத் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.2 | வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரித்தல் மற்றும் அதை **தே.**செ.தி. திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| 5 | **கணக்காய்வு ஐயவினாக்கள்** | | | |
| 5.1 | அனைத்துக் கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு குறிப்பிட்ட திகதியில் பதிலளிக்கப்பட்டுள்ளன | இணக்கமானது | | |
| 6 | **உள்ளக கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.பி.134 (2)DMA/1-2019 இன் படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் ஆலோசனை மேற்கொண்டதன் பின்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டமொன்றினைத் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாத காலப்பகுதியினுள் பதிலளித்தல். | இணக்கமற்றது | அமைச்சின் சில திணைக்களங்களிடமிருந்து பதில்கள் கிடைக்க ஒரு மாதத்திற்கு மேல் எடுக்கின்றது. | உள்ளக கணக்காய்வு கூட்டத்தில் நினைவூட்டல் கடிதம் அனுப்பதல் மற்றும் தாமதமின்றி பதில் அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டது. |

| இல | நிறைவேற்றப்பட வேண்டிய தேவைப்பாடு | இணக்கப்பாட்டுத் தன்மை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி விளக்குக | இணக்கமற்றது. எதிர்காலத்தில் இணக்கமின்மையைத் தவிர்க்க முன்மொழியும் சரியான நடவடிக்கை |
|---|---|---|---|---|
| 6.3 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப் பிரிவு 40(4) இன் அடிப்படையில், முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 6.4 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளும் நிதி ஒழுங்குவிதி 134 (3) இன் அடிப்படையில், கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 7 | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | டி.எம்.ஏ. 1-2019 சுற்றறிக்கையின்படி, குறித்த ஆண்டு காலப்பகுதியில் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன | இணக்கமானது | | |
| 8 | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| 8.1 | சொத்து முகாமைத்துவ சுற்றிக்கை இல.01/2017 இன் பந்தி 07 இன் படி, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் தொடர்பான தகவல்கள் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். | இணக்கமானது | | |
| 8.2 | மேற்குறித்த சுற்றிக்கையின் 13 ஆம் பந்தியின்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளினை அமுலாக்குதல் | இணக்கமானது | | |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கை இல.05/2016 இன்படி, உரிய திகதியில் பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு அது தொடர்பான அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 8.4 | வருடாந்த பொருட் கணக்கெடுப்பில் வெளிப்படுத்தப்பட்ட மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் என்பன சுற்றிக்கையில் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்தப்படல் | இணக்கமானது | | |
| 8.5 | நி.பி. 772 இன்படி, பாவனைக்குதவாத பொருட்களின் விற்பனையானது நடைமுறைப் படுத்தப்பட்டது | இணக்கமானது | | |
| 9 | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கைகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் என்பனவற்றினைத் தயாரித்து அவற்றினை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |

| இல | நிறைவேற்றப்பட வேண்டிய தேவைப்பாடு | இணக்கப்பாட்டுத் தன்மை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி விளக்குக | இணக்கமற்றது. எதிர்காலத்தில் இணக்கமின்மையைத் தவிர்க்க முன்மொழியும் சரியான நடவடிக்கை |
|---|---|---|---|---|
| 9.2 | கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு 6 மாதங்களுக்குள் அகற்றப்படுதல். | இணக்கமானது | | |
| 9.3 | வாகனப் பதிவுப் புத்தகங்கள் பராமரிக்கப்பட்டு அவை புதுப்பிக்கப்படுதல். | இணக்கமானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி.103, 104, 109 மற்றும் 110 இன்படி நடவடிக்கை எடுக்கப்படுதல் | இணக்கமானது | | |
| 9.5 | 2016.12.29 ஆம் திகதிய 30/2016 ஆம் இல. பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 இன் விதிகளின்படி, எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல் | இணக்கமற்றது | அமைச்சிக்கான 43 வாகனங்களில் 3 வாகனங்களுக்கான எரிபொருள் பரிசீலனை 2024 ல் முன்னெடுக்கப்பட்டுள்ளது. | தற்போது அனைத்து வாகனங்களுக்கான எரிபொருள் பரிசீலனை முன்னெடுக்கப்படுகிறது. |
| 9.6 | குத்தகை வாகனங்களின் உரித்துப் பதிவுப் புத்தகம் குத்தகை காலத்தின் பின்னர் மாற்றப்படுதல் | இணக்கமற்றது | குத்தகை வாகனங்க இல்லை | |
| 10 | **வங்கி கணக்குகளின் முகாமை** | | | |
| 10.1 | வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சான்றுப்படுத்தப்பட்டுள்ளதுடன் உரிய திகதியில் கணக்காய்வு மேற்கொள்வதற்கு தயாராகவுள்ளன | இணக்கமானது | | |
| 10.2 | மீளாய்வு ஆண்டில் அல்லது முன்னைய ஆண்டுகளில் காணப்பட்ட செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள் தீர்ப்பனவு செய்யப்பட்டன | இணக்கமானது | | |
| 10.3 | வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களினூடாக வெளிப்படுத்தப்பட்ட மீதிகள் தொடர்பில் நிதிசார் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டிய சீராக்கல்களுக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அத்தகைய மீதிகள் ஒரு மாத காலத்தினுள் தீர்ப்பனவு செய்யப்பட்டன. | இணக்கமானது | | |
| 11 | **நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்** | | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் செலவின எல்லையினை விஞ்சாமல் செலவிடப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |

| இல | நிறைவேற்றப்பட வேண்டிய தேவைப்பாடு | இணக்கப்பாட்டுத் தன்மை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி விளக்குக | இணக்கமற்றது. எதிர்காலத்தில் இணக்கமின்மையைத் தவிர்க்க முன்மொழியும் சரியான நடவடிக்கை |
|---|---|---|---|---|
| 11.2 | நி.பி.94(1) இன்படி, குறித்த ஆண்டின் இறுதியில் ஏற்பாடுகளினை விஞ்சாத பொறுப்புக்கள் மீதமாயுள்ளன. | இணக்கமானது | | |
| 12 | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல் | இணக்கமானது | | |
| 12.2 | நிலுவையாகவுள்ள கடன்கள் தொடர்பில் சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்தல். | இணக்கமானது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கு மேலாக காணப்படும் கடன் மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| **13** | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலாவதியான வைப்புத்தொகைகள் தொடர்பாக நி.ஒ.571 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் | இணக்கமானது | | |
| 13.2 | பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுப் பதிவேடானது இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருகின்றது. | இணக்கமானது | | |
| **14** | **முற்பணக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியிலுள்ள காசேட்டு மீதியானது திறைசேரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 14.2 | நி.பி.371 இன்படி வழங்கப்பட்ட உப கட்டுநிதியானது குறித்த பணியானது பூர்த்தியடைந்ததிலிருந்து ஒரு மாத காலத்தினுள் தீர்ப்பனவு செய்யப்படுதல் வேண்டும் | இணக்கமானது | | |
| 14.3 | நி.பி.371 இன்படி அங்கீகரிக்கப்பட்ட எல்லை மீறாதபடி இடைக்கால கணக்கு வெளியிடல் | இணக்கமானது | | |
| 14.4 | முற்பணக் கணக்கு மீதியானது மாதாந்தம் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கிணக்கம் செய்யப் பட்டுள்ளன | இணக்கமானது | | |
| 15 | வருமானக் கணக்கு | | | |
| 15.1 | ஒழுங்குவிதிகளின்படி, வருமானத்திலிருந்து மீளளிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 15.2 | வருமான சேகரிப்பானது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்படாது இறைவரிக் கணக்கில் நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்தன | இணக்கமானது | | |
| 15.3 | நி.பி.176 இன்படி, வருமான நிலுவைகளின் மீளளிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |

| இல | நிறைவேற்றப்பட வேண்டிய தேவைப்பாடு | இணக்கப்பாட்டுத் தன்மை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி விளக்குக | இணக்கமற்றது. எதிர்காலத்தில் இணக்கமின்மையைத் தவிர்க்க முன்மொழியும் சரியான நடவடிக்கை |
|---|---|---|---|---|
| **16** | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய வகையில் பதவியணியினரைப் பேணுதல் | இணக்கமற்றது | மேலதிகமாக உள்ள பதவியணியினரை தேவையான பதவிகளுக்கு பேணுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க மு.சே.தி ற்கு கடிதம் அனுப்புதல் | |
| 16.2 | பதவியணியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் எழுத்து மூலமாக கடமைப் பட்டியல்கள் வழங்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 16.3 | 2017.09.20 ஆம் திகதிய MSD04/2017 ஆம் இல. சுற்றிக்கையின்படி, அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 17 | **பொது மக்களுக்கான தகவல் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் முறையான தகவல் பதிவேடும் பேணப்பட்டு வருவதுடன் அது தகவலறியும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்குமைவாக இற்றைப் படுத்தப்பட்டு வருகின்றது | இணக்கமானது | | |
| 17.2 | பொதுமக்களுக்கு நிறுவனம் தொடர்பான தகவல்கள் இணையதளம் அல்லது மாற்று வழிமுறைகள் மூலமாக அளிக்கப்பட்டுள்ளதுடன் இந்த இணையத் தளம் மற்றும் மாற்று வழிமுறைகளின் மூலம் பொதுமக்களுக்கெதிரான மெச்சுதல்கள் / குற்றச்சாட்டுக்கள் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன | இணக்கமானது | | |
| 17.3 | தகவலறியும் சட்டத்தின் பிரிவுகள் 08 மற்றும் 10 இன்படி - வருடத்திற்கு இரு முறை மற்றும் வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுதல்.<br><br>பிரஜைகள் பட்டயத்தினை செயற்படுத்துதல் | இணக்கமானது | | |
| 18 | **பிரஜைகள் சாசனம் செயற்படுத்தல்** | | | |
| 18.1 | பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 05/2008 மற்றும் 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் நியதிகளின்படி, நிறுவனத்தினால் பிரஜைகள் சாசனம் / பிரஜைகள் வாடிக்கையாளர் சாசனமானது வகுக்கப்பட்டு அமுல்படுத்தப் பட்டுள்ளது. | இணக்கமானது | | முறைமையொன்று தயாரிக்கப்பட்டு வருகிறது |

| இல | நிறைவேற்றப்பட வேண்டிய தேவைப்பாடு | இணக்கப்பாட்டுத் தன்மை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி விளக்குக | இணக்கமற்றது. எதிர்காலத்தில் இணக்கமின்மையைத் தவிர்க்க முன்மொழியும் சரியான நடவடிக்கை |
|---|---|---|---|---|
| 18.2 | சுற்றிக்கையின் 2.3 ஆம் பந்தியின்படி, பிரஜைகள் சாசனம் / பிரஜைகள் வாடிக்கையாளரின் சாசனத்தினை வகுத்தல் மற்றும் தயாரித்தல் | இணக்கமற்றது | முறைமையொன்று தயாரிக்கப்பட்டு வருகிறது | . |
| **19** | **மனித வளத் திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 ஆம் திகதிய 02/2018 ஆம் இல.பொது நிருவாக சுற்றறிக்கையின் இணைப்பு 02 இலுள்ள வடிவத்தின் நியதிகளின்படி, மனித வளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| 19.2 | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணி நேரப் பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்குக் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வளத் திட்டம் உறுதி செய்தல் | இணக்கமானது | | |
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில், அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படுதல். | இணக்கமற்றது | | அ.நி.சு.02/2018(1) இன் படி செயலாற்றுகை உடன்படிக்கையில் கைச்சாத்திடல் அவசியமற்றது |
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 பந்திக்கேற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு சிரேஸ்ட அதிகாரியினை நியமித்தல். | இணக்கமானது | | |
| **20** | **கணக்காய்வுப் பந்திகளுக்கு பதிலளித்தல்** | | | |
| 20.1 | முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் அதிபதியால் வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சரி செய்யப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |

වෙළෙඳ, වාණිජ, ආහාර සුරක්ෂිතතා සහ සමුපකාර සංවර්ධන අමාත්‍යාංශය
අංක 492, ආර්. ඒ. ද. මැල් මාවත, කොළඹ 03. දුරකථනය: 0112435511 ෆැක්ස් : 0112432255 විද්‍යුත් තැපැල: info@trademin.gov.lk
வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு
இல.492 ஆர்.ஏ.டி.மேல் மாவத்தை, கொழும்பு-03. தொலைபேசி: 0112435511 தொலைநகல்: 0112432255 மின்னஞ்சல்: info@trademin.gov.lk

**Ministry of Trade, Commerce, Food Security and Co-operative Development**

No 492, R A De Mel Mawatha, Colombo 03. Tel: 0112435511 Fxa: 0112432255 E-mail: info@trademin.gov.lk